Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் 12

நாதம்-15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-19 | 04-09-2004 | சனிக்கிழமை | ஓசை -199

கணேசா நகை யுகம் நகைமாளிகை



தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(ரி 10148)

## பேச்சுவார்த்தைகள் பின்னடைவதற்கு புலிகள் அல்ல அரசாங்கமே காரணமாயுள்ளது

### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின் சந்திரசேகரன்



விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சுக்களில் தெளிவாகவே உள்ளனர். அரசாங்கமே பேச்சுக்கள் பின்னடையக் காரணமாக உள்ளது.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அவர்கள் தெரிவித்தார். நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களுடனான சந்திப்பின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சந்திப்பில் பின்னடைவை சந்தித்துள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் அதற்குரிய காரணங்கள் பற்றியும் ஆராய்ந்தோம். தேசியக்கட்சிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சனாதிபதியின் கோரிக்கை பிரதமரால் நிராகரிப்பு

# சுதந்திரக் கட்சிக்குள் வலுவடையும் முரண்பாடு

# சந்திரிகா அவசரமாக நாடுதிரும்பினார் !

*-யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு எதிரான வழக்கு-*

## தேசியத் தலைவர் உட்பட சிலருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கில் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

தேசியத்தலைவர் மீதான நீதிமன்றின் இந்த அழைப்பாணையை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகவருக்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களாலும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக மக்கள் விடுதலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு நிபந்தனையற்றஆதரவு வழங்க இ.தொ.கா முடிவு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிநிபந்தனையற்ற ஆதரவுடன் அரசாங்கத்துடன் இணைய இணங்கியுள்ளது.

கடந்த ஐந்து மாத காலத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்ந்த பின்னர் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவிக்கையில். அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

காங்கிரஸ் வழங்கும் ஆதரவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### *சனாதிபதியின் விருப்பிற்கு மாறாக மங்களசமரவீர*

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா தனது ஐரோப்பாவிற்கான பயணத்தை இடைநடுவில் நிறுத்திக்கொண்டு அவசரமாக நாடுதிரும்பியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகக் கட்டடத்திறப்புவிழா தொடர்பாக சனாதிபதியின் கோரிக்கை பிரதமரால் நிராகரிக்கப்பட்டமை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை மீண்டும் இணைத்துக்கொள்வதில் சனாதிபதிக்கு விருப்பமின்மை இருப்பினும் அமைச்சர் மங்களசமரவீர இதில் காட்டும் ஆர்வமுமே சனாதிபதி அவசரஅவசரமாக நாடுதிரும்பக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

சுதந்திரக் கட்சியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்நாட்டும் விழாவைத் தான் நாடு திரும்பியதும் பெரிய விழாவாக நடாத்த லாம் என்று சனாதிபதி சந்திரிகா லண்டனிலிருந்து எழுத்து மூலம் கேட்டுக் கொண்டிருந்தும்கூட, அந்த வேண்டுகோளைப் புறக்கணித்து,சுதந்திரக்கட்சியின் புதிய கட்டடத்துக்கான கல்நாட்டு விழாவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது தலைமையில் நடாத்தியுள்ளார்

நேற்று முன்தினம் நள்ளிரவு சனாதிபதி நாடுதிரும்புவார் என

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் போராளிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றி இராணுவ உயர் மட்டத்துடன் பேசவுள்ளோம்

### -மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(அலுவலக செய்தியாளர்)

ஆயுதங்களின்றி அரசியல் பணிகளில் ஈடுபடும் எமது போராளிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக இராணுவ உயர்மட்டத்துடன் பேசுவதற்கான ஏற்பாடுகள் செய்துவருகின்றோம். என மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் வைத்து அவர் இவ்வாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு கிழக்கில் உருவாகியுள்ளது

### இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரி தகவல்

கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு ஒன்று உருவாகி வருவதாக இந்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்திய நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது இந்தியப் அமைதிகாக்கும் படை இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் இந்திய படைகளின் புலனாய்வு அதிகாரியாக இலங்கையில் கடமையாற்றிய கேணல் ஹரிகரன் என்ற ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் இளைஞர்கள் குழு ஒன்று விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகிவருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஒசாமா அமைப்பு என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்பு தனது அலுவலகத்தை திருகோணமலை கிண்ணியா பகுதியில் அண்மையில் திறந்துள்ளதாகவும் கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரமேஸ், கௌசல்யன் மற்றும் தளபதிகள் கிளிநொச்சி விஜயம்



நேற்று மட்டக்களப்பிலிருந்து புறப்படுகையில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம் பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் அப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் தியாகத்தால் உரமூட்டிய மண்ணில் மக்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றனர்

## கனகராயன்குளம் ம.வி கட்டடத் திறப்பில் கனகரத்தினம் பா.உ

(அலுவலகசெய்தியாளர்)

மாவீரர்களின் தியாகத்தாலும், குருதியாலும் உரமூட்டிய மண்ணிலேயே இன்று மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

இவ்வாறு கடந்த புதன் நடைபெற்ற கனகராயன் குள மகாவித்தியாலய மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழாவின் போது வன்னி மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: இன்று தமிழீழத்தின் பல பகுதிகளில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் தமிழ் மக்களுக்குப் போதுமானதும் நிறைவானதுமான அபிவிருத்தி எமக்கென ஒரு நிர்வாகமான இடைக்கால நிர்வாகத்தை அமைத்துக் கொள்வதன் மூலமே அமையும் மேலும் இன்று அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் மாவீரர்கள்செய்த தியாகங்கள் நிறைந்த மண்ணிலேயே தமது பணிகளைச் செய்துவருகின்றன. மாவீரர் களின் தியாகத்தாலும,குருதியாலும் உரமூட்டிய மண்ணிலேயே இன்று எமது மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த புதன்காலை 10.45 மணியளவில் நடைபெற்ற இந்தக் கட்டடத்திறப்பு விழாவின்ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களும் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்களான சிவநாதன்கிசோர், செல்வம் அடைக்கலநாதன் கனக ரத்தினம் மற்றும்கல்விசார் உத்தி யோகத்தர்களும் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபரும் நிகொட் நிறுவனக் கொடியினை தண்டாயு தபாணியும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து நிகொட் நிறுவனத் தினரால் அமைத்துக் கொடுக்கப் பட்ட இக் கட்டடத்தினை வவுனி யாமாவட்ட அரசாங்க அதிபரும், தமிழீழக்கல்விக்கழகப் பொறுப் பாளரும் இணைந்துநாடாவை வெட்டித் திரைநீக்கம் செய்து வைத்தனர். தொடர்ந்து இங்கு நடைபெற்ற இந் நிகழ்வின் நினைவாக மரநடுகைவைபமும் இடம் பெற்றது. மரக்கன்றுகளை இங்குவருகைதந்திருந்த இலங் கைத் தமிழரசுக் கட்சி பாராளு மன்ற உறுப்பினர்கள், தமிழீழக் கல்விக் கழகப்பொறுப் பாளர் உட்பட கல்விசார்உத்தி யோகத்தர்களும் நடுகைசெய்தனர். பாடசாலைஅதிபரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பாடசாலை மாண வர்கள், பொது மக்கள், கல்விசார் அதிகாரிகள், பிரமுகர்கள்எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச.தீ)

## வருடாந்த உற்சவம்

(பூநகரி)

பூநகரி வாடியடி அடைக் கலமாதா வருடாந்த உற்சவம் 13 வருடங்களிற்குப் பின்னர் கடந்த புதன்கிழமை கொடியோற்றத்துடன் ஆரம்பமானது. 8 ஆவது நாளான வரும் புதன் அன்று சுற்றுப் பிரகாரத்துடன் நிறைவுநாள் உற்சவம் நடைபெறும். (34)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

அருமைநாயகம் அன்ரனி ஜெகநாத் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை(831284340V) நிரந்தரபயணஅட்டை என்பவற்றுடன் கூடிய பேஸ்ஒன்று வட்டக்கச்சிக்கும் ஜெயந்திநகருக்கும் இடையில் தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (10345)

# வட்டக்கச்சிப் பிரதேச மாதர் சங்கங்களின் சங்கமம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசமாதர் சங்கங்களின் சங்கம நிகழ்வு கடந்த29 ஆம் திகதி கிளி. இராம நாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன்பாடசாலையில் நடைபெற்றுள்ளது. வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கப்டன் வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர் உலக மங்கை ஏற்றி வைத்தார்.தமிழீழத்தேசியக் கொடியினை வட்டக்கச்சிப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழ நிலவன்ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை வட்டக்கச்சிப் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப்பொறுப்பாளர்தமிழ்மலர் அணிவித்தார்.

வட்டக்கச்சிப்பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பேரவைத் தலைவி தங்கேஸ்வரி தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வின் கருத்துரைகளை வட்டக்கச்சிப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், கப்டன்வானதி, வெளியீட்டகப் பொறுப்பாளர் உலகமங்கை. மருத்துவ மாது திருமதி .உமா ஆகியோர் சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி நிகழ்த்தினார். இம்மாநாட்டில் பெண்கள்அமைப்பைச் சார்ந்தவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்ததுடன் சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றை நீக்கும் வழிவகைகள்தொடர்பாகவும் ஆராய்ந்தனர். (15)

# பேசாலைக் கடற்பரப்பில் டைனமற் மூலம் மீன்பிடி

### மீன் உற்பத்தி குறைவடையும் என அச்சம்

மன்னார் தலைமன்னார் பேசாலை சிறுத்தோப்புக் கடற்பரப்பில் டைனமற் மூலம் மீன் பிடித்தல் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றன.

இப்பகுதியில் இவ்வாறு டைனமற் மூலம் பிடிக்கப்பட்ட ஒரு மீனின் எடை 6 கிலோ- 8கிலோ வரை உள்ளது. இதனால் கடலில் உருவாகும் மீனின் இனப்பெருக்கம் அழியும் எனவும் முன்னர் இம் முறையைப் பாவித்ததன் காரணமாகவே பலநாட்களாக இப் பகுதியில் மீன்பிடித்தல் இல்லாமல் இருந்தது எனவும் தெரிவிக்கப் படுகிறது. இது குறித்து இப்பகுதி மக்கள் மீனவ சங்கங்கள் மூலமாக கடற்றொழில் திணைக்களத்திற்கு முறையீடு செய்துள்ளார்கள். (மி)

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்காக்கும் திட்டத்தின் கீழ் நாடகப்போட்டி

யுனிசெவ் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்காக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான நாடகப்போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 10.00மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் யாழ். மாவட்டத்தின் 5 வலயங்களில் இப்போட்டிகள் நடைபெற்றது. 31.07.2004 தென்மராட்சியிலும் 01.08.2004 தீவகத்திலும் 07.08.2004 வடமராட்சியிலும் 08.08.2004 யாழ்ப்பாணத்திலும் 14.08.2004 வலிகாமம்வலயத்திலும் நாடகப்போட்டிகள் நடைபெற்றது.

வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 நாடகங்கள் மாவட்டமட்டப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன. இத்திட்டத்துடன் மாவட்டக்கல்வித்திணைக்களமும் இணைந்து செயற்படுகின்றன. இப்போட்டிக்கான சுற்றறிக்கை யாழ். வலயகல்வி சார் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஊடாகப் பங்குகொள்ளும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# அடம்பன் மாணவரின் நன்மை கருதி புதிய பேருந்து சேவை ஆரம்பம்

(மன்னார்)

தமிழீழப் போக்குவரத்துக் கழகம்அடம்பன் பிரதேசத்தில் உள்ளபாடசாலை மாணவ, மாணவிகளின் நலன் கருதி நேற்று முன்தினம் முதல் காலை 8.00 மணிக்கு கறுக்காய்க் குளம் தடை முகாமிலிருந்து போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்துள்ளது. இந் நிகழ்விற்கு அடம்பன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஆ.சந்தியோகு தலைமை தாங்கினார்.

மங்கல விளக்கினை மடு வலயக்கல்விப் பணிப்பாளர் அ.யுபியஸ் குருஸ் தமிழீழப் போக்குவரத்துக் கழக முகாமையாளர் பெனாண்டோ பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் ஏற்றிவைத்தனர். இந்தப் புதிய பாடசாலை பேருந்துச் சேவை கறுக்காய்க்குளம், ஆண்டான் குளம், வட்டக்கண்டல், பரப்புக்கடந்தான் போன்ற இடங்களுக்குச் செல்லும் நிகழ்வில் மடுவலயக் கல்விப்பணிப்பாளர் குருஸ் பேசுகையில் நீண்ட இடைவெளிக்குப்பின்னர் இந்தப் பேருந்துச் சேவையை ஒழுங்கு செய்தமைக்கு அடம் பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் றொபேட் அவர் களும்,தமிழீழப் போக்குவரத்துக் கழகத்திற்கும் நன்றியைத் தெரி வித்து இதனால் இப்பகுதிப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் அடையும்எனவும் கூறினார். இந் நிகழ்வில்பொதுமக்கள் பாடசாலை மாணவ,மாணவிகள், அரசியல் துறையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (மி)

## தண்டனை

மன்னார் நகரத்தில் 50இற்கும் மேற்பட்ட போத்தல்களில் கள் விற்பனை செய்த சமயம் மன்னாரப் பொலிசார் அவற்றைக் கைப்பற்றியதுடன் விற்பனை செய்த நபரினையும் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தின் முன் நிறுத்தினர். இதன்போது மன்னார் நீதவான் அந் நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை அறவிட்டதுடன் 50 போத்தல் கள்ளும் அழிக்கப்பட்டன.

# வவு. வடக்கு பிரதேச செயலர் ஐயம்பிள்ளைக்கு சேவைநலன்பாராட்டு

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.ஐயம்பிள்ளை அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழாநேற்று வேலன்குளம் அ.த.க பாடசாலையில் கிராமமாதர் அபிவிருத்திச்சங்க பொருளாளர் ம.சீதா தலைமையில் இடம் பெற்றது. அறிமுகவுரையினை புதிதாக வவுனியா வடக்குப் பிரதேச செயலாளாராக பொறுப்பேற்ற பரந்தாமன் அவர்கள் நிகழ்த்தினார்.

பாராட்டுரைகளை வவுனியா வடக்கு மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் ஆவர்த்தனா மற்றும் கிராம அலுவலர் உமாபதி நெடுங்கேணிப் போதனாசிரியர் குகதாஸ்,கமக்கார அமைப்புத் தலைவர் ஜெயராசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை ஓய்வுபெற்றுச் செல்லும் முன்னாள் வவுனியாவடக்கு பிரதேசசெயலாளர் ஆற்றினார். நன்றியுரையினை கிராம மாதர் அபிவிருத்திச்சங்க அரசசெயலாளர் நிகழ்த்தினார்.

# பூநகரி - முட்கொம்பனில் திலீபன் மருத்துவமனை திறப்பு

கடந்த 1- ஆம் திகதி பூநகரி முட்கொம்பனில் தியாகதீபம் திலீபன் மருத்துவ மனை கிளை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை திலீபன் மருத்தவமனை அபிவிருத்திக் குழுத்தலைவர் ஐயம்பிள்ளை அவர்களும் கிராமத்தலைவர் குலம்அவர்களும் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை டாக்டர் நளா ஏற்றிவைத்தார். மருத்துவ மனையினை பொறுப்பாளர் தமிழ்வாணன் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார் இதன் பெயர்ப்பலகையினை முட்கொம்பன் வலயப் பொறுப்பாளர் திரைநீக்கம் செய்துவைத்தார். இதனைத்தொடர்ந்து சிறப்புரைகளும் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன நன்றியுரையினை எல்லைப்படை மாவீரரின் துணைவியார் சுதா நிகழ்த்தினார்.

# துயர் பகிர்வோம்

### சீனிவாசகம்- இராஜேஸ்வரன்

யோகபுரம் உப அஞ்சலகத்தில் அஞ்சலராகக் கடமை புரியும் சீனிவாசகம் இராஜேஸ்வரன் அவர்கள் திடீர்மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

தகவல்,
உபதபால்அதிபர், ஊழியர்கள்,
யோகபுரம், மல்லாவி.

(4934)

## நூலகத்திற்கு அன்பளிப்பு

(பூநகரி)

கனடா வாழ் பூநகரி மக்களால் பூநகரி ம.வித்தியாலய நூலகத்திற்கு கண்ணாடி அலுமாரிகளும், நூல்களும் கையளிப்பு நிகழ்வு நாளை ஞாயிறு 10.00 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்வார். (34)

# கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில் 27 - 11 - 1948

இறைவன் மடியில் 02 - 09 - 2004

### அமரர் உயர் திரு.சீனிவாசகம் இராஜேஸ்வரன்

(யோகபுரம் தபால் அலுவலக ஊழியர்)

தரும்ப சிட்டியைப் பிறப்பிடமாகவும் இல-98, பாலிநகர் வவுனிக்குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டவரின் மறைவுச் செய்தி கேட்டு நாம் மிகவும் துயரடைகின்றோம். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


தகவல்
ஆலய பரிபாலன சபை,
யோகபுரம் சிவனாலயம்,
யோகபுரம்.

(சி.10346)

# பயங்கரவாதத்திற்கு எதிரான தலைமைத்துவமும் ஈராக் மீதான எனது தலையீடும் சரியானவையே!

## -அமெரிக்க சனாதிபதி திட்டவட்டமாக அறிவிப்பு

**ஈராக் மீதான ஆக்கிரமிப்பை ஆணித்தரமான முறையில் நியாயப் படுத்தியுள்ள அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பயங்கர வாதத்திற்கெதிரான தனது தலைமைத்துவம் சரியானது என்றும் நியாயப்படுத்திக் கூறியுள்ளார்.**



அமெரிக்காவைக் காப்பதற்கு ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என்று கூறிய புஷ் பாதுகாப்பான உலகத்தை உருவாக்கப் போவதாகவும் அமெரிக்காவைக் காக்கும் முயற்சிகளைக் கைவிடப் போவதில்லையென்றும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சூளுரைத்துள்ளார்.

அத்துடன் ஈராக் மீதான ஊடுருவலையும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரிற்குத் தாம் வழங்கும் தலைமைத்துவத்தையும் நியாயப்படுத்திப் பேசியுள்ளார். புஷ் குடியரசுக்கட்சியின் தேசிய மாநாட்டை முடித்துக்கொள்ளும் வகையிலும் நவம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கான போட்டியினைத் தொடங்கும் வகையிலும் தொலைக் காட்சியில் மேற்கண்டவாறு தோன்றி உரையாற்றியுள்ளார்.

அமெரிக்கா இப்போது தாக்குதல் முனையில் இருப்பதாகவும் வெளிநாடுகளில் பயங்கரவாதிகள் மீது தாக்குதல்களைத் தொடுத்து வருவதாகவும், அந்த வகையில் உள்நாட்டில் அவர்களை எதிர் கொள்ள வேண்டியதில்லை என்றும அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பான உலகைக் கட்டியெழுப்பப் பாடுபடப் போவதாகக் கூறியுள்ள அவர், அமெரிக்கர்களுக்கு மென்மேலும் நம்பிக்கை தரும்வகையில் அதனை மாற்றுவதற்கு முயன்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் தனது உரையில் சனநாயகக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ஜோன் ஹெரியை நோக்கிக் கடுமையான விமர்சனங்களையும் தொகுத்துள்ளார். தனது எதிராளியின் கொள்கைகள் தனது கொள்கைகளிலிருந்து பெரும் மாற்றத்திற்குள்ளானவை என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த காலத்திற்குரிய அந்தக் கொள்கைகள் அமெரிக்காவிற்குத் துணைபோகப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.


இதேவேளை அமெரிக்காவை உலகத்தினர் மதிக்கும் நாடாக மாற்றப்போவதாக ஜோன்ஹெரி கூறியுள்ளார்.



பாக்தாத்தில் வீடொன்றில் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிடும் அயலவர்கள் இங்கு கடந்த வியாழக்கிழமை இரவு மோட்டார் செல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் எவரிற்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

## எண்ணெய் விநியோக குழாய் தகர்ப்பு

ஈராக்கிய கிளர்ச்சியாளர்கள் நாட்டின் வட பகுதியில் அமைந்துள்ள துருக்கிக்கான எண்ணெய் விநியோகக் குழாயினை தகர்த்துள்ளனர். இதன் காரணமாக ஏற்றுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.



பாக்தாத் நகரின் சேரிப்பகுதியில் அமெரிக்க டாங்கி ஒன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளது. ஈராக்கியர் ஒருவர் வண்டியை விரைவாகத் தள்ளுகிறார்.

# ஹொக்கைடோ அருகே சர்ச்சைக்குரிய தீவுகளுக்கு ஜப்பான் பிரதமர் விஜயம்

## -ரஷ்யாவுடன் முறுகல் அதிகரிக்கலாமென அச்சம்

(டோக்கியோ)

ஜப்பானின் வடகோடியில் உள்ள ஹொக்கைடோ தீவின் அருகேயுள்ள தீவுகளை 2ஆம் உலக யுத்தத்தின் முடிவில் ரஷ்யா கைப்பற்றிக்கொண்டது. இந்தத் தீவுகள் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையே தகராறு இருந்து வருகிறது.

இந்தத் தீவுகளைப் பார்வையிட ஜப்பானியப் பிரதமர் கொய் சுமி நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றார்.

அவர் ஹொக்கைடோ சென்று அங்குள்ள ஹனசகி துறைமுகத்தில் இருந்து கடலோரக்காவல் படை ரோந்துப் படகில் சர்ச்சைக் குரிய தீவுகளுக்குச் சென்றார்.

வடக்குப் பிரதேசம் என்று ஜப்பானிலும் தெற்கு குரிலேஸ் என்று ரஷ்யாவிலும் இந்தத் தீவுகள் அழைக்கப்படுகின்றன.

1945ஆம் ஆண்டு இந்தத் தீவுகளை ரஷ்யா கைப்பற்றியபோது 17 ஆயிரம் ஜப்பானியர்கள் அங்கு வசித்தனர். அவர்கள் அங்கு இருந்து வெளியேறும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். இப்போது அங்கு 14ஆயிரம் ரஷ்யர்கள் வசித்து வருகிறார்கள்.

கொய்சுமியின் இந்தப் பயணத்திற்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது. இது நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும் என்று ரஷ்யா கூறியுள்ளது.

### 3 துருக்கியர் படுகொலை

துருக்கி நாட்டைச் சேர்ந்த 3 பணயக்கைதிகளை ஈராக் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். அதை வீடியோ படமாகத் தயாரித்து அல்-ஜசீரா டீ.வி.க்கு தீவிரவாதிகள் அனுப்பியுள்ளனர். அந்த வீடியோவில் இருந்து ஒருசில காட்சிகளை மட்டும் அந்த ரி.வி.க்கு ஒளிபரப்பியது. ஆனால் கொல்லப்படும் காட்சியை அது ஒளிபரப்பவில்லை. 3பணயக் கைதிகளும் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பதையும் அது தெரிவிக்கவில்லை.

# இடைக்கால அரசிற்கு உதவியாக ஈராக்கில் தேசிய சபை அமைப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் 100 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபை புதன்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டது சனவரி மாதம் தேர்தல் நடைபெறும் வரையில் இடைக்கால அரசுக்கு உதவியாக இந்தச் சபை செயற்படும்.

ஈராக்கில் பிரதமராக இயாத் அல்லாவி கடந்த ஜூன் 28 ஆம் திகதி பொறுப்பேற்றார். அவருக்கு உதவியாக நிர்வாகத்தைக் கவனிக்க புதிய தேசிய சபை அமைக்கப்பட்டது. இதில் 100 பேர் உறுப்பினர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். அடுத்த ஆண்டு சனவரிமாதம் தேர்தல் நடைபெறும் வரை இந்தசபை செயற்படும் தேசிய வரவு செலவுத் திட்ட ஒப்புதல் வழங்க தேசிய சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று அரசின் சில கொள்கைத் திட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டுமென்றால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற சபைக்கு அதிகாரம் உள்ளது.

# தீவிரவாதிகள் வசமுள்ள 350 பேரை விடுவிக்க ரஷ்யா பெரும் போராட்டம்

## -குழந்தைகள் நிலை கவலைக்கிடம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பாடசாலைக் குழந்தைகள் உட்பட்டவர்களை பணயக்கைதிகளாக தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ள சம்பவத்தையடுத்து துருக்கிக்கு விஜயம்



ரஷ்யப் பாடசாலையில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் உறவினரான பெண்மணி.

செய்திருந்த ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின், தனது பயணத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு பாடசாலைக் குழந்தைகளை மீட்பதற்காக அவசரமாக ரஷ்யா திரும்பியுள்ளார். அவசரமாக ஆலோசனைக் கூட்டமொன்றையும் நேற்று முன்தினம் நடாத்தியுள்ளார்.

இதேவேளை பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு, குடிநீர் வழங்கத தீவிரவாதிகள் மறுத்துள்ளனர் குழந்தைகள் பட்டினியால் வாடுவதாகக் கூறப்படுகின்றது.

ரஷ்யாவின் தென்பகுதியில் சிறுவர்களையும் பெரியவர்களையும் ஆயுத முனையில் தடுத்து வைத்திருக்கும் கடத்தல்காரர்களிடம் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர் எனினும் சில பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கு வெளியிலிருந்து நீர் மற்றும உணவுகள், மருந்துகள் வழங்கும் விடயம் பற்றி இணக்கத்தை ஏற்படுத்த முடியாமற் போனதாக பிராந்தியப் பொறுப்பதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் குர்ஷேனியா மாகாணத்தின் டெல்கா நகரப் பாடசாலையினுள் கடந்த புதன்கிழமை திடீ



பணயக்கைதிகள் வைக்கப்பட்டுள்ள பாடசாலையை ரஷ்யப் படைவீரர்கள் சுற்றி வளைத்துள்ள வேளை அப்படையினர் ஓய்வெடுக்கின்றனர்.

ரென்று புகுந்த தீவிரவாதிகள் பிஞ்சுக் குழந்தைகள் உள்ளிட்ட, 200 மாணவர்கள் உள்ளிட்ட, 350 இற்கும் மேற்பட்டோரை பணயக்கைதிகளாகப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காபூலில் வீதி ஓரப்பாது காப்பினை மேற்கொள்ளும் ஆப்கான் படை வீரர்.

# அமெரிக்க ராணுவத் தளத்தினுள் புலி புகுந்ததால் பெரும் பரபரப்பு

## -தேடுதல் பணி தொடர்கிறது

(வொஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள லூசியானாவில் போர்ட் போல்க் இராணுவத்தளத்தினுள் ஒருபுலி புகுந்து விட்டது. அது எப்படி வந்தது என்று தெரியவில்லை.

அதைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் 100 இராணுவவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஒரு இலட்சத்து 98ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள இந்த இராணுவத் தளம் பைன் மரங்கள் நிறைந்த குன்றுப்பகுதியாக விளங்குகிறது.

இதனால் இராணுவ உலங்கு வானூர்திகளில் மயக்க ஊசியுடன் இராணுவ வீர்கள் தேடுதல் வேட்டையைத் தொடங்கியுள்ளனர்.

155ஆம் கட்டைப்பகுதியில்-

# 3 கடைகள் முற்றாக எரிந்தன

# பல இலட்சம் ரூபா நட்டம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதிக் கடைத்தொகுதிகளில் உள்ள கடையொன்றில் தீ மூண்டதால் மூன்று கடைகள் முற்றாக எரிந்து பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.**

கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் கிளிநொச்சி ஏ-9 சாலையோரமாக 155ஆம்




கட்டைப்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் அமைந்துள்ள கடையொன்றில் திடீரெனத் தீ மூண்டது. தீ மூண்டகடை எரிபொருள் விற்பனை நிலையமாதலால் அங்கு இருந்த பெற்றோல், மண்ணெண்ணெய்கள் நிரப்பப்பட்ட கொள்கலன்கள் வெடித்துச்சிதற அருகில் இருந்த ஏனைய இரு கடைகளுக்கும் தீ பரவியது. இதனால் இம்மூன்று கடைகளும் முற்றாக எரிந்து சாம்பராகின. அருகிலிருந்த தையல்நிலையம், மிதிவண்டிதிருத்தகம் ஆகியவையே எரிந்தன. இம்மூன்று கடைகளிலிருந்தும் எந்தவொரு பொருட்களையும் மீட்கமுடியாமல் போனதாகவும், அனைத்துப் பொருட்களும் முற்றாக எரிந்ததோடு தாம் வைத்திருந்த பெருந்தொகையான பணநோட்டுக்களும் எரிந்து சாம்பராகியதாகவும் கடைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை எரிபொருள் வாணிபத்தில் உரிமையாளர் பணம் வைத்திருந்த பெட்டியினுள் பணநோட்டுக்கள் கட்டுக்களாக எரிந்து கிடந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு கடையிலிருந்த அனைத்துப் பொருட்களும் எரிந்த நிலையில், எரியமுடியாத பாகங்கள் எஞ்சிக் கிடப்பதையும் அவதானிக்க முடிந்தது. தீ விபத்து ஏற்பட்ட வேளை எரிபொருட் கடையின் உரிமையாளர் கடைக்கு வெளியே படுத்திருந்ததாகவும், கடை எரிந்து பெரிதாகத் தீ மூண்ட பின்னரே அவர் தீப்பற்றிக் கொண்டதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இத்தீவிபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. எரிபொருள் நிலையத்தில் 5இலட்சம் பெறுமதியான அழிவு ஏற்பட்டதாகவும், தையல் நிலையத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான ஆடைகள் எரிந்து நாசமாகியதாகவும் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச.தீ)

## வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகம் அமைத்தது குறித்து சர்.செ.சங்கம் வாழ்த்து

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மகிழ்ச்சி அடைந்ததுடன் வாழ்த்தினையும் தெரிவித்தார்கள். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்



சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைமை வதிவிடப்பிரதிநிதி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மல்லாவி வதிவிடப்பிரதிநிதி ஆகியோர் மனித உரிமை செயற்பாடுகள் சம்பந்தமாக வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பணிப்பாளர் அருட்திரு.கருணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்து நேற்று முன்தினம் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கு மனித உரிமை செயலகத்தின் பணிப்பாளர் அருட்திரு. கருணாரட்ணம் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில்; தற்காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் இந்த மனித உரிமைச் செயலகம் அமைந்துள்ளதை யிட்டு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ... கையில்:

உலகம் முழுவதும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்விலும், மனித உரிமைக் கோட்பாடு களிலும் மாற்றங்கள் வருவதனால் அதற்கேற்ற வகையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் அந்தமனித உரிமைக் கோட்பாடுகளுக்கு அமைவாக உரிமைகளைக் காத்துக் கொள்ளவும், அறிந்து கொள்ளவும் வேண்டும். அத்தோடு நாம் முக்கியமாக இந்த மனித உரிமைகள் பற்றி சிறிலங்கா அரசாங்கம் எந்தவொரு ஈடுபாடும் இல்லாமல் இருப்பதையும், அடிப்படை உரிமைகள் பற்றியும் குறிப்பாகக் கல்வி சம்பந்தமாகவும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம் என்றார். (தீ.ச)

## இந்தியாவிலிருந்து 50 அகதிகள் விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்

(மன்னார்)

இந்தியா மண்டப முகாமில் வசித்த 50 இலங்கை வாழ் தமிழ் அகதிகள் இந்தியா/திருச்சி விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் இலங்கை கட்டுநாயக்க விமான நிலையம் வந்து இறங்கி தமது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்றுள்ளார்கள்.

இவர்களுக்கான சகல பயண வசதிகளையும் இந்தியா, தமிழ் நாட்டிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் செய்து வைத்தது.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையம் வந்திறங்கியதும் கொழும்பிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் இவர்களைப் பொறுப்பேற்று பெரியவர்களுக்கு 5000ரூபா, சிறுவர்களுக்கு 2000 ரூபா வழங்கி அவர்களது சொந்த இடமான மன்னார் ,பேசாலை, முருங்கன், யாழ்ப்பாணம், நல்லூர், வவுனியா,செட்டிகுளம் ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைத்தனர். (மி)

## திருடப்பட்ட தாலிக்கொடி காவல்துறையால் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் இளந்தேவன் என்பவரது வீட்டில் திருட்டுப்போன ரூபா 45000 பெறுமதி மிக்க தாலிக் கொடியை புதுக்குடியிருப்பு காவல் துறையினர் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது ; குறித்த நபர் வீட்டில் திருட்டுப் போனதையிட்டுக் கடந்த 30.08.04 அன்று புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து காவல்துறையினர் செய்த புலன் விசாரணைகளில் சந்தேக நபரை 31.08.04 அன்று கைது செய்து, பொருளையும் மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேக நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அப்பகுதி காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (08)

### சிகிச்சை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கனடாவிலிருந்து இங்கு வந்திருக்கும் மருத்துவர் டிலினி றெனோல்ட் என்பவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இம்மாதம் 03ஆம் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குப் பொதுவான நோய்களுக்குச் சிகிச்சையளிக்கவுள்ளார்.

## திலீபன் மருத்துவமனையில் நாளை உளநலச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

உளநோயாளர்களுக்கான உளநலச் சிகிச்சை நிபுணரின் விசேட சிகிச்சை நாளை 5ஆம் திகதி புளியங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

எனவே அன்றைய தினம் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் வருகை மேற்கொண்டு சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வண்ணம் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (சோ,கு)

## உடைந்துள்ள பாலத்தால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(வட்டக்கச்சி

வட்டக்கச்சி ஹட்சன் வீதிச்சந்திக்கு மிகவும் அண்மையாக உள்ள பாலம் நீண்டகாலமாக திருத்த வேலைகள் எதுவும் செய்யப்படாமல் காணப்பட்டு வருகிறது. இப்பாலம் அரிப்புக்குள்ளாகி இருப்பதனால் கனரக வாகனங்கள பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மற்றும் இரவு வேளைகளில் பயணிப்போர் வீதி விபத்துக்களுக்கு உள்ளாவதும் குறிப்பிடத்தக்கது. (12)




தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன்ம் மணியங்குளம் கிராமத்தில் நடைமுறைப்படுத்தும் 93 வீடமைப்புத் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக கடந்த 30ஆம் திகதி அக்கராயன் கிராமசேவை அலுவலர் எஸ்.மகேந்திரம் அடிக்கல் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம். (சோ,கு)

## சேது சமுத்திரத்திட்டத்தை செயற்படுத்த மத்தியரசு ஒப்புதல்

(புதுடில்லி)

இலங்கை-இந்தியாவிற்கிடையிலான கடற்பரப்பில் சேது சமுத்திரத்திட்டம் அமைப்பதற்கு இந்திய மத்தியரசு நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தது.

புதுடில்லியில் கூடிய மத்தியமைச்சரவையின் பொருளாதார விவகாரங்களுக்கான குழு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளதாக நிதியமைச்சர் சிதம்பரம் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மத்தியரசு இதற்கான நிதியைக் கணிசமாக வழங்கவுள்ளது. 2000கோடி ரூபா செலவில் இத்திட்டம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேதுசமுத்திரக் கழகம் என்கின்ற பெயரில் இதற்கான சிறப்பு செயற்பாட்டு நிறுவனம் ஒன்று உருவாக்கப்படுமெனவும் இந்நிறுவனம் இதற்கான நிதியைத் திரட்டி சேதுகால்வாய்ப் பணிகளைச் செயற்படுத்துமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமாதானத் தீர்வை அடிப்படையாகக் கொண்டு சிறி.சு.கட்சியின் எதிர்காலப் பயணம் திட்டமிடப்படும்

### சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து இனப் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் அரசியல் தீர்வைக் காண்பதை அடிப்படையாகக் கொண்ட புதிய கண்ணோட்டத்திற்கு அமைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலப் பயணம் திட்டமிடப்படும் என்று அதன் தலைவியான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு விடுக்கப்பட்ட விசேட செய்தியில் சந்திரிகா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு விரிவான அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்று அவசியம் என்றும், அரசாங்கக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் விரிவான முறையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.இதற்கு புதிய அரசியல் யாப்பு ஒன்று வகுக்கப்படுவது அவசியமானது. இந்த மாற்றங்களுக்கு அமைவாக கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் மக்கள் பரந்தளவில் பங்கு கொள்வது அவசியமானதென்றும் சந்திரிகா தெரிவித்தார்.

# யாழ்.இல் அதிகரித்துவரும் கலாசாரச் சீரழிவுகளுக்கு

# பின்னணியில் சிறிலங்காப் படைத்தரப்பே உள்ளது!

## விரிவுரையாளர் கே. குமாரவேல் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

**குடாநாட்டில் மிக வேகமாக அதிகரித்து வரும் கலாசார சீரழிவுகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் படைத்தரப்பின் கைகள் இருப்பதாக விரிவுரையாளர் கே.குமாரவேல் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினது ஏற்பாட்டில் குடாநாட்டில் பரவலாக நடாத்தப்பட்டு வரும் "சமகால அரசியல் பார்வை" எனும் தொடர் கருத்தரங்கின் ஒரு பகுதி சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் வி.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ்ப் பாணக் கல்லூரியின் வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பிரிவு விரிவுரையாளர் கே.குமாரவேல் தமது உரையில் இது பற்றி மேலும் விபரிக்கையில் யாழ்.குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காலப்பகுதியில் சொல்லிக் கொள்ளத்தக்கதாக குற்றச் செயல்கள் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை. போதைவஸ்துப் பாவனை முற்றாகத் தடைசெய்யப் பட்டிருந்தது.

ஆனால் 1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரது கைகளில் வீழ்ந்ததையடுத்து அவை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. போதை வஸ்துப் பாவனை வேகமாக அதிகரித்து வருகின்றது. சாதாரண வீதியோர வியாபாரியிடம் கூட விற்பனைக்காகப் போதை வஸ்துப் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கலாசார சீரழிவினை இளைஞர்களிடையே தூண்டும் வகையிலான நீலப்பட ஒளிநாடாக்களும் பெருமளவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இராணுவத்தின் உதவியுடன் இது செயற்படுத்தப்பட்டு வருகிறது என்றார். (27)

## நான்கு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகம் உட்பட பல முக்கிய பாதுகாப்பு நிலையங்களை வீடியோப் படம் எடுத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் 04 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## டக்ளஸ் பதவி நீக்கிய 35 பேரை பணியிலமர்த்த நீதிமன்றம் உத்தரவு

இந்து கலாசார அமைச்சின் கீழ் சேவையாற்றி வந்த 35 பேரும் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அமைச்சர் மகேஸ்வரனின் காலத்தில் பதவிக்குச் சேர்க்கப்பட்டவர்களாவர். டக்ளஸ் தேவானந்தா அந்த அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் அவர்கள் விலக்கப்பட்டனர். எனினும் குறிப்பிட்ட 35 பேரும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன் அடிப்படையில் அவர்களை மீண்டும் பணிகளில் சேர்த்துக் கொள்ளும் உத்தரவு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணச் செயலகத்தில் இயங்கும் இந்து கலாசார திணைக்கள அலுவலகத்திற்கு குறிப்பிட்ட 35 பேரில் 13 பேர் சமுகமளித்தனர். (32,27)

## இராணுவ ட்ரக் வண்டி மோதி பலியான குடும்பஸ்தரின் மனைவி இழப்பீடு கோரல்

(வடமராட்சி)

இராணுவ ட்ரக் வண்டியினால் மோதிக் கொல்லப்பட்ட தனது கணவரது இழப்பிற்கான நஷ்டஈட்டினை பெற்றுத்தருமாறு குடும்பத் தலைவியொருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப் பாடொன்றைச் செய்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு விளாண் சந்திப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த காசியர் செல்லையா (வயது 60) என்பவரது சார்பினில் அவரது மனைவியே இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த தச்சு வேலைத் தொழிலாளியான காசியர் செல்லையாவினை வேகமாக வந்த இராணுவ ட்ரக் வண்டியொன்று மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக மல்லாகம் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றிருந்தது.

எனினும் விபத்துச் சம்பவத்திற்குக் காரணமான இராணுவ வாகனத்தைச் செலுத்தி வந்ததாகக் கூறப்படும் இராணுவச் சாரதி பல தடவைகள் நீதிமன்றிற்கு ஆஜராகாது இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே தனது கணவரது உயிரிழப்பிற்கான நஷ்டஈட்டினைப் பெற்றுத் தருமாறு கொல்லப்பட்டவரது மனைவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீதிமன்ற விசாரணைத் தவணைகளுக்கு குறித்த இராணுவச் சாரதி நீண்ட நாட்களாக ஆஜராகாததால் அவ்விசாரணையில் தான் நம்பிக்கை கொண்டிருக்கவில்லையென இவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (27)

## யாழ்.இல் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது

(வடமராட்சி)

விற்பனைக்கென கஞ்சாவை பதுக்கிவைத்திருந்த நபரொருவர் யாழ். நகரப் பகுதியில் வைத்து மது வரித்திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் அவர் பொலிசாரூடாக யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட வேளையில் அவரிற்கு ஆறு மாத கால சிறைத் தண்டனை விதித்து மேலதிக நீதவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன் தீர்ப்பளித்துள்ளார். யாழ்.பிரதான வீதியைச்சேர்ந்த ஞானமுத்து யோகராசா எனும் நபரே 35 கிராம் கஞ்சாவை பதுக்கி வைத்திருந்த வேளை பிடிபட்டவராவார். (27)

## கல்வியை இடைநிறுத்திய சிறார்கள் மீது யுனிசெவ் அதிக அக்கறை கொண்டுள்ளது

### –யாழ். வதிவிடப்பிரதிநிதி கருத்து

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் தமது கல்வியைத் தொடராது விட்ட சிறார்கள் விடயத்தினில் யுனிசெவ் அமைப்பு கூடிய அக்கறையினை கொண்டிருப்பதாக அதன் யாழ். வதிவிடப்பிரதிநிதி புறுனோ தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் திட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டிலான பயிற்சிப்பட்டறையொன்று புதனன்று யாழ்.நகரின் வை.எம்.சி.ஏ மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் திட்டத்தின் இணைப்பாளர் செல்வி க.வேழினி தலைமையில் இடம்பெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் இது தொடர்பாக மேலும் பிரஸ்தாபிக்கையில் கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாடசாலை கல்வியை இடையில் கைவிட்டுவிட்ட மாணவர்கள் விடயத்தில் கடந்த இரண்டு வருடத்திற்கு மேலாக யுனிசெவ் கூடுதல் திட்டங்களை வகுத்து நடவடிக்கை எடுத்து வருகின்றது. கல்வித்திணைக்களமூடாக இவ்வாறு கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிக்கொண்ட சிறார்களுக்கான விசேட கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அது மட்டும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு போதுமானதல்ல என்பதனையும் நான் அறிந்துள்ளேன்.

இதனிடையே உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக சிறார்களது தேவைகள் பற்றியும் அறிந்துகொள்ள நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். என்று அவர் மேலும் கூறினார். (27)

## –புலிகளால் கைது செய்யப்பட்ட இரு ஊர்காவல் படையினரையும் விடுவித்துத் தரக்கோரி ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலை கள்ளம்பத்தை பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரான சந்தனபண்டார, ஷபிந்த பியஸ்ரீ ஆகிய இருவரையும் விடுவித்துத் தருமாறு கோரி கடந்த புதனன்று திருகோணமலையில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். திருமலை நகரில் வர்த்தக நிலையங்கள் சில அங்குமிங்குமாக மூடப்பட்டுக் காட்சியளித்தன. தமிழ் வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. தமிழ் மொழி மூல பாடசாலைகள், அரச மற்றும் மாகாணசபையின் அலுவலகங்கள் வழமைபோன்று இயங்கின. திட்டமிட்டபடி பயிற்சிப்பட்டறை நிகழ்வு திருமலை நகர மண்டபத்தில் நடைபெற்றது. திருமலை முற்ற வெளியின் முன்னால் உள்ள சேமக்காலையில் இனந்தெரியாதோரால் கிரனேட் ஒன்று வீசப்பட்டதாக பொலிஸ் அதிகாரி தயாசமரவீர தெரிவித்தார். சிங்கள மக்கள் குழுவொன்று ஊர்வலமாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தது.. (25)

## அதிகாரப் பரவலாக்கல் மூலமாகவே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்

### –அரசுக்கு பேராசிரியர் விதாரண அறிவுரை

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் திட்டமே உள்வாங்கப்பட வேண்டிய சூழல் தற்போது நிலவுவதாகவும், அரசு இதைப் புரிந்துகொண்டு உடனடியாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் பேச்சுக்களை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிப்பது அவசியம் என்றும் பேராசிரியர் கருத்துக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள திட்டத்தையும், அரசு தயாரிக்கும் இதற்கு நிகரான இன்னுமொரு திட்டத்தையும் முன்வைத்து, அதிகாரப் பரவலாக்கல் முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆகக்கூடிய பிராந்திய அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலமே, தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம் என்பதை அரசும் சிங்கள மக்களும் புரிந்து கொள்வது அவசியமென்றும், இரு பெரும்பான்மைக் கட்சிகளும் இணைந்து இவ்விடயத்தில் தீர்வுகாண ஒத்துழைப்பது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 32 அரசியல்வாதிகளுக் கெதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியைச் சேர்ந்த 32 சிரேஷ்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணையாளர் குழுவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் குழுவின் சிரேஷ்ட அங்கத்தவர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார் எனினும் இவர்களின் பெயர்களை அவர் வெளியிடமறுத்து விட்டார்.

## கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்

### ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கையின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளைத் தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வூட்டர் வில்டன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையினைக் கண்காணிக்கும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளைத் தாம் கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே தரப்பின் நடவடிக்கைகளையும் தாம் வெகு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தத்தை உரியமுறையில் இரு தரப்பினரும் கடைப்பிடிக்கின்றார்களா? என்பது குறித்து பக்கச் சார்பற்ற முறையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அவதானிக்க வேண்டும் என்றும் அவர்களது நடவடிக்கைகள் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையினைப் பாதிக்கும் வகையில் அவர்கள் நடந்து கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# ரோபோ நாய்

"ஜபோ" எனப்படும் ரோபோ நாய் மனிதனுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றக் கூடியது.



முதலில் தனது கூட்டிலிருந்து வெளி வரும் போது பெரிய புன்னகையுடன் வரும் இந்நாய் தன்னுடன் விளையாடுவதற்கு அழைக்கும். "ஜபோ" மிருதுவாகவும், வழவழப்பாகவும் காணப்படுவதுடன் அதன் நகர்வுகள் நாய்க்குரிய குணங்களுடன் காணப்படும்.




சில விசேட குணாதிசயங்களுடன் வரும் இந்த ரோபோ நாய் ஒரு குறிப்பிட்டவகைப் பெயருக்கு பதிலளிக்கக் கூடியவாறு தயார்ப்படுத்தப்படவும் கூடியது.

பார்ப்பதற்கும் உங்கடையுடைய கணினியுடன் 'வயர்லெஸ்' தொடர்பு ஏற்படுத்தவும் இதனுள் உள்ள (கமரா) உதவுகிறது.

இதை ஒரு சிறிய குட்டியாக்க அதன் மென்பொருளை மாற்ற முடியும்.

நடந்ததன் பின்னரோ, பாவித்ததன் பின்னரோ இதை தூய்மைப்படுத்த வேண்டியதில்லை என்பது இந்த ரோபோ நாயின் பிரதான அனுகூலங்களில் ஒன்றாகும்.

உணர்ச்சிமிக்க உறவைக்கொண்டுள்ளதாக இதன் வலுவும், முக்கியத்துவமும் காணப்படும்.



கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் வகையில 'பயிற்' சி கொடுக்கப்பட்டு நிகழ்ச்சிப்படுத்த வேண்டியதுதான் நிஜ நாயை ஒத்த வகையில் மனிதனுக்கு உதவுவதில் நிகரற்றது இந்த 'ஜபோ' ரோபோ நாய்.

எஜமானை மகிழ்விக்க நடனம் கூட ஆடும் திறன் பெற்றது.

மன எழுச்சிமிக்க சைகைகளை உருவாக்குவதன் மூலம் வினாக்களுக்கு தாமதமின்றி விடையளிக்கும் திறன் வாய்ந்தது.

இது ரோபோதான். ஆனால் வேட்டைநாய் போன்று தடிப்பான தலையுடையது அல்ல. அதனால் அதற்கான பயிற்சியிலும், ஒழுங்கு தொடர்பான கட்டளைகளிலும் அடிக்கடி மாற்றங்களை ஏற்படுத்துவது உகந்ததல்ல.

தடவிக்கொடுக்கும் போதும், உணவூட்டும் போதும் நாயைப் போலவே நடந்து கொள்ளும் இந்த ரோபோ.

செயற்கையான 'ஜபோ' ஒரு பிரமாண்டமான வெற்றியாகவே கருதப்படுகின்றது.

ஒருவருக்கொருவர் புரிதலுடன் நடந்து கொள்ளும் வகையிலான இந்த ரோபோ உருவாக்கம் பார்ப்பதற்கு மனதில் பதியத்தக்கதாகவும் வேடிக்கையானதாகவும் உள்ளது. ஆனால் நிஜ நாயைப்போலல்லாது "ஜபோ" கீழே விழுந்து விடுவதும் உண்டு.

# ஸ்கேனர்களிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்களாலும் ஆபத்துண்டு

முழு உடம்பையும் ஸ்கேனிங் செய்பவர்களின் எண்ணிக்கை இன்று கணிசமாக அதிகரித்து வருகிறது. உடம்பில் ஏதாவது கட்டி இருக்கிறதா? என்று முன்னதாகவே தெரிந்து கொள்ள முடியும் என்பதால் இந்தச் சோதனைக்கு மவுசு கூடி வருகிறது. இந்த நிலையில் புற்றுநோய் இருக்கிறதா? என்று கண்டுபிடிக்க உதவும் இந்தப் பரிசோதனையே புற்றுநோய்க்குக் காரணமாகி விடும் என்ற திடுக்கிடும் தகவலை வல்லுநர்கள் வெளியிட்டுள்ளனர். சிடி ஸ்கேனிங் மற்றும் கம்யூட்டர் டோமோகிராபி ஸ்கேனர்கள் மூலம் உடம்பை முழு ஸ்கேனிங் எடுக்கும்போது அதிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு ஒட்டுமொத்த புற்றுநோய் ஆபத்தை அதிகரிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

வழக்கமான இதுபோன்ற பிளாட் எக்ஸ்ரே ஸ்கேனிங்குக்குப் பதிலாக கம்யூட்டர் மென்பொருட்கள் மூலமும், பல்நோக்கு கோணங்கள் மூலம் எடுக்கப்படும் படங்கள் மூலமும் துல்லியமான முடிவுகளைப் பெறலாம். அதேபோல எம்.ஆர்.ஐ. ஸ்கேனிங்கும் இதேபோன்ற பரிசோதனைதான். ஆனால் அதில் புற்றுநோய் உண்டாகும் ஆபத்து எதுவும் கிடையாது. ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களை யாரும் மறந்திருக்க முடியாது. உலகில் மனித இனத்தின் மீது முதன்முதலாக அணுகுண்டுகள் பிரயோகிக்கப்பட்ட இந்த நகரங்களில் அணுகுண்டுவீச்சிற்குத் தப்பிப்பிழைத்து இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு எத்தகைய டோஸ கதிர்வீச்சுச் சிகிச்சை அளிக்கப்படுகின்றதோ அதேயளவு கதிர்வீச்சு, முழு உடம்பையும் ஸ்கேனிங் எடுக்கும் போது வெளிப்படுகிறது.

# புதியவகை இசைக்கருவி

இசையை இரசிப்பதன் மூலமே ஒருவர் ஒரு நாளைக் கழிக்க முடிந்தால் எவ்வளவு சுகமாக இருக்கும்? எனினும் அவருக்கு ஏற்ற விருப்பமான இசைக்கருவி, நேரம், இடம் என்பன அமைவது அபூர்வமாகும்.

எனினும் புதிய விஞ்ஞான தொழில்நுட்ப யுகமான இன்று மனிதனுக்குப் பிடித்த இசைக்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு படியாக ஜப்பானின் பிரபலமான ஜமானோ கூட்டுத்தாபனம் ஆர்மோனியம் போன்ற புதியவகை இசைக்கருவி ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த இசைக்கருவி இரண்டு மூன்றாக மடித்து கையில் கொண்டு செல்லக்கூடியதாகும். இது 850 கிராம் எடை கொண்டது. இது பியானோ, வயலின் உட்பட 100 கரு விகளின் இசை ஸ்வரங்களைக் கொண்டதாகும் என்று கூறப்படுகிறது. இதனோடு ஹெட்போன் HEAD PHONE இணைக்கப்பட்டுள்ளதால் அருகில் உள்ளவருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாது இசையை இரசிக்க முடியும். இது மிக வேகமாக விற்பனையாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆந்தை

ஆந்தை என்ற பறவையின் முக்கிய சிறப்புகள் மூன்று. மென்மையான அதன் சிறகுகள், முட்டை விழிகள், இரும்புக்குச் சமமான வலிய கூர்மையான அலகுகள் துளி கூடச்சத்தமில்லாமல் தன் இரையை நெருங்குவதற்குத்தான் ஆந்தையில் சிறகுகள் அதிமென்மையாக இருக்கின்றன. ஆந்தைக் குடும்பத்தை இரண்டு வகைப் படுத்தலாம்

Tytoniedae- இதயவடிவமான முக அமைப்பைக் கொண்டவை. சிறகுகள் அடர்ந்த நீண்ட கால்கள் உள்ளவை. மிக அடர்ந்த மரங்களிலுள்ள பொந்தில் அல்லது கட்டடங்களில் ஆட்கள் நெருங்க முடியாத உயரத்தில் வாழும்.



Stgidae- இக் குடும்பத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உள்ளன. ஆந்தை முழி இவ் வகைக்குத்தான் சிறப்பாகச் சொல்லலாம். தலையைத் திருப்பாமல் தனக்கு முன்னும் பின்னும் என்ன நடக்கிறது. என்று பார்த்துக் கொள்ளத்தான் பறவைகளுக்கு பக்கத்திற் கண்கள் உள்ளன. உடம்பைத் துளி கூட அசைக்காமல் தலையை முழுசாக வட்டம் அடித்து தன்னைச் சுற்றி சகலவற்றையும் பார்க்கும் சக்தி ஆந்தைக்கு உண்டு.

# வௌவால் விலங்கினமா?

முன்பு ஒரு காலத்தில் விலங்குகளுக்கும் பறவைகளுக்குமிடையில் சண்டை மூண்டதாகவும், அதன் போது இரு உயிரினங்



களும் பலத்த இழப்புக்களைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. பறவைகள் மட்டுமன்றி விலங்குகளும் இதன்போது இறந்தன. இறுதியில் வெற்றி பெற்ற விலங்குகளின் பக்கம் சென்ற வெளவால் விலங்கினமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றும் போல் இன்றும் வெளவால் பறவை இனங்களோடு சேரமுடிவதில்லை. அது ஏன்? விஞ்ஞானிகள் வெளவால் இனத்தை இனங்காணப்படாத உயிரினமாக வகைப்படுத்தியுள்ளனர். அதாவது பறவையினமா? விலங்கினமா? என்ற முடிவுக்கு வராதுள்ளனர். வெளவால் பறக்கக் கூடிய பாலூட்டியாகும். இன்று விவாதம் ஒன்று நடத்தப்பட்டால் வெளவால் விலங்கினம் என்ற முடிவுக்கே வரமுடியும்.

வெளவால்கள் மெமேலியா விலங்கினத்தைச் சேர்ந்த கைரோப்டரா குலத்தைச் சேர்ந்தவையாகும். விலங்கினங்களில் பறக்கும் வல்லமையைக் கொண்ட உயிரினமே வெளவால். அதற்கு ஏனைய பறவைகளைப் போன்ற சிறகமைப்புக் கிடையாது. கால்களுக்கிடையேயுள்ள மெல்லிய துணி போன்ற ஒன்றே அது பறப்பதற்கு உதவுகின்றது.

குரங்குகள், டொல்பின்களைப் போன்று வெளவால்களையும் பல வழிகளில் பயிற்றுவிக்கலாம் எனக் கூறப்படுகின்றது. அதன் மூலம் வெளவால்களைக் கொண்டு பல விடயங்களை நிறைவேற்றலாம் என்றும் கூறப்படுகின்றது. உலகில் 900 வகையான வெளவால் இனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன.

சிறிலங்காவில் 30 வகையான வெளவால்கள் காணப்படுகின்றன. வெளவால் ஒரு முறைக்கு ஒரு குட்டியையே ஈனும். அது தாயின் நிறையில் 1/6 பங்காகும்.

குட்டி வளர்ந்து 2 மாத காலத்தில் சுயமாகப் பறக்கும். அதுவரை தாயின் வயிற்றுப் பகுதியைப் பற்றிக்கொண்டிருக்கும். (கங்காருவைப் போன்று) வெளவாலின் ஆயுட்காலம் 20 வருடங்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. அவை இரவில் மட்டுமே இரையைத் தேடிச்செல்கின்றன. பகலில் பாழடைந்த கட்டடங்கள், குகைகள் போன்றவற்றில் தங்கி வாழ்கின்றன. வெளவால்களில் 40 சென்றிகிறேட்டுக்கும் அதிக வெப்பத்தைத் தாங்கும் சக்தி ஒரு மணித்தியாலயத்திற்கு மேல் நீடிக்காது.

# கிரவல் தூசியால் எழும் பாதிப்புக்கள்

கிரவல் வீதிகளில் வாகனங்கள் செல்லும் போது எழும் தூசினால் மக்களின் சுவாசத்திற்குப் பங்கம் ஏற்படுகிறது. அதிகளவு தூசியைச் சுவாசிப்பது சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது என வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வரட்சிக் காலங்களில் கிரவல் வீதியினூடாக வாகனங்கள் செல்லும் போதே அதிகளவு தூசி எழுகின்றது. இவ்வாறு எழுகின்ற தூசி மனிதனின் மூச்சுக்குழாயினூடாக உட்சென்று புற்றுநோய் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. கிரவற்றுகள் களில் இருக்கின்ற சிலிக்கன் ஒட்சைட் என்ற இரசாயனப் பதார்த்தம் ஒரு நார்ப் பொருளை உருவாக்கும் தன்மையுடையது. இதனால் சுவாசப்பையில் "சைபக்ஸ்" என்ற பொருள் உருவாக்கப்படுகிறது. எனவே இதைச் சுவாசிப்பவர்கள் காலப்போக்கில் சுவாசப் பையிறுக்கம், சுவாசவீதக்குறைவு, மூச்சுத் திணறல் போன்றவற்றிற்கு ஆளாகின்றனர். இக்கிரவற்றுகள்கள் உணவுப்பதார்த்தங்கள், நீர்நிலைகள் என்பனவற்றோடும் கலக்கும் வாய்ப்புள்ளது. இதனால் தொடர்ச்சியான இருமல், தொண்டைக் கரப்ப ன் மற்றும் முட்டு, தொய்வு, சுவாசத்தொற்று, (நிமோனியா) போன்றவற்றிற்கும் அடிக்கடி ஆளாகநேரிடும். இது மக்களிற்கு உளவியற் தாக்கத்தையும் கூட ஏற்படுத்தவல்லது. அத்துடன் இத்தூசிகளால் மாணவர்களின் கற்றல் திறன், கிரகிக்கும் திறன் என்பனவும் பாதிக்கப்படும். இதன் மிகப் பெரிய தாக்கமாக சுவாசப்பை புற்று நோய் ஏற்பட வாய்ப்புண்டு. அதாவது நீண்ட காலத்தில் 10-15 வருடங்களின்பின் இவர்கள் புற்றுநோய்த்தாக்கத்திற்கு உள்ளாக நேரிடும். அது சுவாசப்பைப் புற்றுநோயாகவோ அல்லது, சுவாசக் குழாய்ப் புற்றுநோயாகவோ அல்லது சுவாசப்பையைச்சுற்றியுள்ள பையில் ஏற்படும் புற்று நோயாகவோ இருக்கலாம் என மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

# தெரிந்து கொள்ள

* அதி புத்திசாலிக் குரங்குகள் என்றால் சிம்பன்சியைச் சொல்லலாம். இவ்வகைக் குரங்குகளை தொடர்ந்து ஆராய்ச்சி செய்து பார்த்தபோது குரங்குகளிற்குச் சங்கீத ஞானம் இருப்பது தெரியவந்துள்ளது. ஆம்! சிம்பன்சிக் குரங்குகளிற்கு பாப் சங்கீதத்தை விட ஜாஸ் பிடித்திருக்கின்றதாம். குரங்குகள் பற்றிய வீடியோப் படங்களையும் பார்க்கும் இவைகள் தம் பாசையில் பாட்டும் பாடுகின்றனவாம்.
* அழகான குரங்குகள் என்று மார்மோஸெட் வகையைச் சொல்லலாம். மனிதனும் பொறாமைப்படும் அளவிற்கு அழகு எப்பொழுதும் கூட்டமாகப் பேசிக்கொண்டிருக்கும். இவை நீண்ட கூந்தலைக் கொண்டிருக்கும். அழகற்ற குரங்கு என்றால் அவை 'ப்ரோபொலிஸ்' குரங்குகள் தான்.
* தென்னாபிரிக்காவில் வாழும் "டவ்ரகாலி" என்ற ஆந்தைக்குரங்கு பகலில் தூங்கிவிட்டு இரவில் ஊர்சுற்றும். இவற்றின் முகம் ஆந்தையைப் போல் காணப்படுவதால் ஆந்தைக் குரங்கு என்றழைக்கப்படுகின்றது.

# புத்தகப்பிரியரான கல்பா

பத்தாம் நூற்றாண்டில் பாரசீக நாட்டை அப்துல் ஹலீம் இஸ்லாமாயில் என்ற பெயருடைய கல்பா ஒருவர் ஆட்சி செய்துள்ளார். புத்தகப் பிரியராக விளங்கிய இவர் ஒரு இலட்சத்து பதினேழாயிரம் நூல்களைச் சேகரித்து வரிசைப்படி அவற்றைப் பிரித்து வைத்திருந்தார்.

அவர் போர்க்களம் செல்லும் போதெல்லாம் அந்த நூல் நிலையத்தையும் தன்னுடன் கொண்டு செல்வார். எவ்வாறெனில் 400 ஒட்டகங்கள் வரிசைமாறாமல் அவரது புத்தகங்களைச் சுமந்து கொண்டு செல்லும்.

ஒவ்வொரு ஒட்டக ஓட்டிகளும் தங்களது ஒட்டகங்கள் மீது என்னென்ன புத்தகங்கள் உள்ளன என்பதை அறிந்து வைத்திருப்பார்கள். திடீரென்று கல்பா ஒரு புத்தகத்தின் பெயரைக் கூறி அப்புத்தகத்தை கொண்டு வரச்சொல்லும் போது ஒரு சில நிமிடங்களில் கல்பா கேட்ட புத்தகம் அவரிடம் வந்து சேர்ந்து விடுமாம்.

## பறவைகளின் நீண்ட பயணம்

மிகச்சிறிய பறவைகளில் நீண்ட தூரம் இடப்பெயர்ச்சி செய்யும் பறவை "ரோபஸ் ஹம்மிங்" பறவையாகும். ஒன்பது சென்றி மீற்றர் நீளமே கொண்ட இப்பறவை குளிர் காலத்தில் அலாஸ்காவிலிருந்து மெக்சிக்கோ நாட்டிற்கு இடம் பெயர்கிறது. போக வர 6400 கிலோ மீற்றர் தூரம் பறக்கிறது.

# இல. கல்விமுறைமை மீதான அரசியல் செல்வாக்கும் அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளும்

ஒரு நாடு குடியேற்ற நிர்வாகத்தின் கீழ் இருக்கும் போது ஆளுவோரின் நோக்கங்களை நிறைவேற்றும் முறையிலேயே அந்நாட்டின் கல்விக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். போர்த்துக்கேயர் இலங்கையில் தமது சமயத்தைப் பரப்புவதையே கல்வியின் நோக்கமாகக் கொண்டனர். ஒல்லாந்தரும், பிரித்தானியரும் இலங்கையில் அறிமுகப்படுத்திய கல்வி வர்த்தகம், கலாசாரம், பிரச்சாரம் என்பவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கியது. குடியேற்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரெஞ்சுக்கல்வி முறை முழுமையாக கலாசார நோக்கங்களின் அடிப்படையிலேயே அமைந்தது.

"கல்வியின்றி சனநாயகம் இல்லை" என்கிறார் ஜபர்ஜன். வாழ்க்கைக்கற்றல் எனும் யுனெஸ்கோ வெளியீடு சனநாயகத்திற்கு கல்வியில் உரிய இடம் அளிக்கப்படாதது போலவே, அரசியலறிவுக்கும் கல்வியில் உரிய இடமளிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது. அரசியலுணர்வைத் தூண்டுதல், சனநாயக இயல்புகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்குப் பதிலாக ஒரேவித புத்திமான்களான குடிமக்களைப் பயிற்றுவிதலே தற்போது கல்வியில் முக்கிய இடம்பெற்றுள்ளதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளின் கல்வி அபி விருத்தி ஒருவகையில் அவற்றின் தேசிய விடுதலையே ஆகும்" எனக் கல்வி அறிஞர்கள் கூறுகிறார்கள். (எட்கா பெரோடா-வாழக் கற்றல்-பக்29) ஒருநாட்டின் அரசியல் உறுதிப்பாடு அல்லது நிலையின்மை அதன் கல்வி விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இந்த வகையில் அரசியல் மாற்றங்களுக்கேற்ப கல்வித்துறை மாற்றமடையும். இதற்கு மறுதலையாகக் கல்வித்துறையில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப அரசியல்

> அரசியல்நோக்கிலும், சமூகஅழுத்தங்களாலும்,தேர்தல் காலங்களிலும் இருவேறுபட்ட அரசியல் சித்தார்த்தங்களைக் கொண்ட அரசுகளினால் முன்வைக்கப்பட்ட கல்விக்கொள்கையின் தொடர்ச்சியின்மை காரணமாகச் சில முன்வைப்புக்கள் சம்பவங்களாகவே முடிவுற்றன.

களத்தில் மாற்றங்கள் ஏற்படும். எனவே அரசியல் மாற்றங்களும், கல்வித்துறை மாற்றங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பது தெளிவாகும். உதாரணமாக மகாத்மா காந்தி அரசியல் தலைமையை மாற்றக் கல்வியையே கருவியாகப் பயன்படுத்தினார். மேலும் லெனின் அரசியல் மாற்றத்திற்கு கல்வியைப் பயன்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அடிப்படையில் எமது நாட்டின் கல்வி முறைமை மீதான அரசியல் செல்வாக்கின் பாதகமான விளைவுகளை நோக்கின்,

மொழி அடிப்படையில் உருவாகும் பிரச்சினைகள். அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் நாடுகளின் சர்வ சாதாரணமான நிலைமை இதுவாகும். 1950 கல்வி வெள்ளை அறிக்கையில் மொழிப் பேதங்களைக் கருத்திற்கொள்ளாது சுயமொழி மூலமான கல்வி வலியுறுத்தப்பட்ட போதும் 1956இல் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி அரசு 1958இல் சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்கியமை காரணமாக சிங்கள மொழிமூலக் கல்வி பெற்றவர்க்கு அரச நிறுவனங்களில் தொழில் பெறுவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தது. வித்தியோதய, வித்தியலங்கார பல்கலைக்கழகத் தோற்றம் மேலும் சிங்களமொழி உயர் கல்விக்கு வழிவகுத்தது.

சிறுபான்மையினரிடையே இம்மொழிக் கொள்கை பாதகமான நிலையைத் தோற்றுவித்தது. மேலும் பல்கலைக்கழகத் தரப்படுத்தல் கொள்கையும், சிறுபான்மையினரிடையே இனமோதலை உருவாக்குவதாக அமைந்தது எனலாம்.

1972இல் அரசின் "கல்வியின் புதிய பாதை"யும் மொழிக்கல்வி பற்றிக் குறிப்பிடும்போது தமிழ் மொழி மூலம் கற்கும் பிள்ளைகளுக்கு "முன்னேறிய அந்நிய மொழியாக" ஆங்கிலமும், ஆட்சி மொழியாகச் சிங்களமும் கற்பித்தல் அவசியமாகும் என்ற கருத்து அரசியல் செல்வாக்கினால் ஏற்பட்ட பாதகமான விளைவாகும். இதன்மூலம் சிங்கள சமூகம் கல்வித்துறையிலும் பொருளாதார சமூக ரீதியில் உயர்நிலையை எய்துவதற்கு காரணமாகவும், சிறுபான்மையினர் கல்வி, பொருளாதார சமூக வளர்ச்சியில் பின்தள்ளப்பட்டுச் செல்வதற்குக் காலாகவும் ஆனது எனலாம்.

1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக முன்வைத்தது. பின்னர் 1987 இந்திய இலங்கை உடன்படிக்கையின் போது ஏற்பட்ட 13ஆவது திருத்தம் தமிழை அரசகரும மொழியாகவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் வழி செய்தது.

ஆங்கில இணைப்பு மொழி இருஇனங்களையும் இணைப்பதில் தோல்வியையே இன்றுவரை சந்தித்துள்ளதெனலாம். கீழ்மட்ட மக்களின் மத்தியில் ஆங்கில விருத்தியின்மையும், ஆங்கிலத்தை "வளர்ப்பதற்கான முறையான திட்டமின்மையும், ஆசிரிய ஆளணிப்பற்றாக்குறையும் ஆங்கிலக் கல்வியை மேல்தர வர்க்கத்தினர்க்கே உரித்தானதாக இன்றுவரை அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்களவர்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் பயிலுதல் எனும் தற்கால நடைமுறையும் இனவாதக் கண்ணோக்கில் பூரணவெற்றியை ஈட்டித்தரத் தடையாக உள்ளதெனலாம். 1972இன் கல்வியின் புதியபாதையின்படி தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களம் போதிப்பது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டது. மூன்றாம் மொழியாக தமிழ் மக்களுக்குச் சிங்களத்தைப் போதிக்க முற்பட்ட அரசு சிங்கள மக்களுக்கு தமிழ் போதிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய கொள்கை அரசியல் ஆபத்திற்கு இட்டுச் செல்லும் என அரசு கருதியது " கல்வியின் புதிய பாதை" இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

"பலநாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்குப் பெரும்பான்மையோரின் மொழி கட்டாயமாகப் படிப்பிக்கப்படுகின்றது. ஆனால், எந்த நாட்டிலும் சிறுபான்மையோரின் மொழி பெரும்பான்மையோருக்குக் கட்டாயமாகப் படிப்பிக்கப்படுவதை நாம் அறியோம்" என்று கூறுகிறது.

அடுத்து எமது நாட்டின் கல்வி முறைமை மீதான அரசியல் செல்வாக்கினால் ஏற்படும் பாதகமான மற்றோர் விளைவு தொழிலாளர் வகுப்பினரின் பாதிப்பாகும்.

கடந்த அறுபது ஆண்டு காலப பகுதியில் சாதாரண மக்களின் கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில் பலபுதிய கல்வி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும பரந்த அடிப்படையில் சாதகமான ஏற்பாடுகள் தொழிலாள வகுப்பினரைச் சென்றடையாமை பாதகமான விளைவெனலாம்.

உதாரணமாகப் பாலர் கல்வி முறையாகப் பின்தங்கிய வகுப்பினரிடம் முக்கியத்துவம் பெறாமையும், 13 ஆண்டு காலம் கல்வி தொடர்ச்சியாகக் கற்கும் நிலையும், பல்கலைக்கழகத்தில் மேலும் 3-5 ஆண்டுகள் வரை கற்று பட்டம பெறும் நிலையில் இவ்வளவு நீண்டகாலம் கல்விகற்கும் சக்தி சாதாரண தொழிலாளர் வகுப்பினருக்குச் சாத்தியமானதா? என்ற வினா எழுகிறது. அவர்களுடைய வறுமைநிலை மிகக்குறைந்த வருமானம் என்பவற்றுடன் எந்த நேரத்திலும் தங்கள் கல்வியை இடைநிறுத்திக்கொள்ளும் வாய்ப்புகளே அதிகமாகத் தெரிகின்றன.

உலகளாவிய ரீதியில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் முறை சார்ந்த நீண்டகாலப் பாடசாலைக் கல்வி இப்பின்தங்கிய வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்குப் பொருத்தமற்றதாகும்.

இலவசக் கல்விபோன்ற முக்கிய ஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தி பயனை அடைவதற்குக் கூட முடியாத நிலைப்பாடு பின்தங்கிய வகுப்பினரிடம் காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் பின்தங்கிய வகுப்பினருக்கென்று உருவாக்கப்பட்ட இலவசக் கல்வித்திட்டம், இலவசப் பாடநூல் விநியோகத்திட்டம் என்பவற்றால் நீண்ட காலத்திற்குப் பிள்ளைகளை பாடசாலையில் வைத்துப் பராமரிக்கும், தாங்கும் சக்தியுடைய மத்திய வகுப்பினரே பெரிதும் நன்மையடைகின்றனர் இந்த ஏற்பாடுகள் யாவும் மத்தியதர வகுப்பினருக்கு என்றே அரசியல்வாதிகளால் ஆக்கப்பட்டது என ஐயுறுவோரும் உள்ளனர்.

> தமிழ்மொழி மூலம் கற்கும் பிள்ளைகளுக்கு "முன்னேறிய அந்நிய மொழியாக" ஆங்கிலமும், ஆட்சி மொழியாகச் சிங்களமும் கற்பித்தல் அவசியமாகும் என்ற கருத்து அரசியல் செல்வாக்கினால் ஏற்பட்ட பாதகமான விளைவாகும்.

பாடசாலை அமைப்பு முறையிலும் பாதகமான அம்சங்களைக் காணமுடிகிறது. அதாவது நகர்ப்புறங்களிலுள்ள வசதிகளும் செல்வாக்கும் மிக்க அரசாங்கப் பாடசாலைகள் மத்திய உயர்தர வகுப்பினருக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளது போன்ற தோற்றப்பாடே காணப்படுகிறது. சாதாரண மக்கள் பயிலுவதற்கென்று வசதிகள் மிகக்குறைந்த, ஆசிரியர் பற்றாக்குறையுடைய பல பாடசாலைகள் கிராமமட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு கல்விச் செலவீன ஒதுக்கீடு குறைவாகவும், தேர்ச்சிமட்டம் மிகக் குறைவாகவும் காணப்பட, நகர்ப்புற உயர் பாடசாலைகளில் கல்விச் செலவீன ஒதுக்கீடு அதிகமாகவும் பொதுப்பரீட்சைகளில் உயர்தர சித்திகளையும் பெறுகின்றனர்.

உயர்கல்வி பெறும் மட்டத்திலும் பின்தங்கிய வகுப்பினர் பாரிய பின்னடைவை கொண்டுள்ளனர் எனலாம். முகாமைத்துவ ரீதியிலும் பின்தங்கிய பிரதேசங்களில் முறையான மேற்பார்வை ஆலோசனை வழிகாட்டலின்மை, தகுதியான நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறை, காலத்துக்கு காலம் மாறிவரும் அரசின்கொள்கையால் கல்வி நிர்வாக மாற்றங்கள் என்பன நிர்வாக ஒருங்கிணைப்பைச் சீர்கேடடையச் செய்துள்ளன எனலாம்.

இதனடிப்படையிலேயே 1992 தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையின் படி தேசிய கல்விக் கொள்கை உருவானது. நிலையான கல்விக் கொள்கையின் அவசியம் இக் கொள்கை மூலம் வலியுறுத்தப்பட்டிருப்பினும் பாடசாலை மீளமைப்பு, ஆசிரியர்சேவை, பதவி உயர்வுத் திட்டங்கள் என்பவற்றை முறையாக அமுற்படுத்த முடியாத பாதகநிலையே ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் அரசியல் நோக்கிலும் சமூகஅழுத்தங்களாலும் தேர்தல்காலங்களிலும் இரு வேறுபட்ட அரசியல் சித்தார்த்தங்களைக் கொண்ட அரசுகளினால் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கையின் தொடர்ச்சியின்மை காரணமாகச் சில முன்வைப்புக்கள் சம்பவங்களாகவே முடிவுற்றன. தொடர்ச்சியான அர்த்தமான அமுலாக்க நடவடிக்கைகள் இல்லாமையினால் அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் கிட்டாமற் போய்விட்டன.

தலைமைத்துவ மட்டத்தில் (அரசோ அல்லது அமைச்சரோ) மாற்றம் ஏற்படும்போது முன்னைய கொள்கைகள் கைவிடப்படும் போது நோக்கம் சிதறுண்டு போவதனைக் காணலாம்.

கற்கைநெறிகளில் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தொடரப்படாததினால் சமூகம் பாதிக்கப்பட்டது. பள்ளி மட்டத்தில் முன்தொழில் படிப்பும், பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் கற்கைநெறிகளும் இதற்குப் பொருத்தமான உதாரணங்களாகும்.

1981 இல் கொண்டுவரப்பட்ட கொத்தணிப்பாடசாலை முறைமையும் திட்டமிடலின் பலவீனத்தையே காட்டுகிறது. எமது நாட்டின் பாரம்பரிய " நோயான" தலைமைத்துவ மாற்றத்தைத் தொடர்ந்து கொள்கைப் புறக்கணிப்பு எதிர்காலத்தை வெகுவாகப் பாதிக்கும் அம்சம் எனலாம்.

இவ்விதமாக திடீர் முடிவுகள், உடனடித் தீர்மானங்கள் அடிப்படையிலான செயல்முறைகள் என்பது கல்விக்கு உகந்தன அல்ல என்பதை அரசு மேலிடத்தவர்களே உணர்ந்துள்ளனர் என்பதை அண்மைக்கால குறிப்புக்கள் எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன எனலாம்.

ஆக்கம்,
திரு.ந.செந்தில்வடிவேல்,
முகாமையாளர்,
ஆசிரியர் மத்தியநிலையம்,
கிளி.இராமநாதபுரம் ம.வி.
கிளிநொச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக 01-09-2004இல் கடமைப்பொறுப்பேற்றுக் கொண்ட

**அம்பலவாணர் சோதிநாதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பு. ஜெகதீஸ்வரன்*
(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி)
*த. செந்தில்குமரன்*
(கிளி/மத்திய கல்லூரி)

(5023)



### முழங்காவில்
## கிருஷ்ணர் ஆலய புனராவர்தன மகா கும்பாபிஷேகம்

**06.09.2004 திங்கட் கிழமை காலை 6.05 முதல் 7.15 வரை உள்ள சுபவேளையில் இடம்பெறும். எண்ணெய்க் காப்பு. 5.09.2004 ஞாயிற்றுக்கிழமை அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(5027) **ஆலய பரிபாலன சபை.**



## நீத்தார் நினைவில் 41ஆம் நாள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 | | 25 |
| * | | * |
| 09 | | 07 |
| * | | * |
| 1943 | | 2004 |



சட்டவாளரும், சான்றெழுத்தரும், வருவாய்ப் பகுதியின் சட்ட மதியுரைஞரும், ஏழை எளியோருக்குச் சட்ட உதவி வழங்கியவருமாகிய

## அமரர் உயர்திரு. ஆ.அ. அருநாயகம் அவர்கள்

இயற்கை எய்தி நாற்பத்தோராம் நாளான இன்றும் அவர் நினைவுகளை மீட்டு, அந்நினைவுகளுடல் என்றும்அவர் மதியுரையின் வழி நடப்போம்.

(5021) **வருவாய்ப்பகுதி, நிதித்துறை.**



## நெஞ்சை விட்டு நீங்காத
### நான்காம் ஆண்டு நினைவில்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 | | 03 |
| * | | * |
| 07 | | 09 |
| * | | * |
| 1978 | | 2000 |



## மேஜர் இளநிலா
### (தம்பையா உதயகுமாரி)

வீர மகளாகி வேங்கையும் நீயாகி
தாய்மண் நேசித்த தங்கையுமாகி
தானைத் தலைவனின் வீரப்படைதனில்
ஒரு பகுதியின் தலைவியாய் - நீயும்
நேரடிச் சமரிலே நின்று போராடி
உன் அணி வீரரோடுன்னை - மண்ணில்
விழுதாக்கி மறைந்த சோதரியே
ஆண்டுகள் நான்கானாலும் உன் நினைவு
எம் நெஞ்சை விட்டகலாதம்மா.

(5024)

*உன்னோடு வீரகாவியமான அனைத்து மாவீரர் களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.*

உங்கள் நினைவில் வாடும்
பாடசாலையடி, கண்டாவளை. பெற்றார்,சகோதரிகள்.


## தனி நாட்டுக்கான இன்னுமொரு பெயர் இ. நிர்வாகமாம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக யோசனைகள் மக்களைத் திசை திரும்புவதற்காக ஐ.தே.கட்சி உருவாக்கியது என பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது பாரதூரமான தேசிய நெருக்கடிக்கு வித்திட்டுள்ளதென கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர். இடைக்கால நிர்வாக யோசனை தனி நாட்டிற்கான இன்னுமோர் பெயர் என கடந்த புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மங்கள சமரவீரவிற்கு எதிராக எஸ்.பி. வழக்கு

(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும், ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்திற்கு மெதிராக மானநட்ட வழக்கொன்றை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் விவசாய சமுர்த்தி அமைச்சர். சமுர்த்தி நிதியைத் தேவையற்ற திட்டங்களுக்குச் செலவழித்துள்ளபடியால் பலகோடி ரூபாய் நட்டம் சமுர்த்தித் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ளதென மக்கள் தொடர்பக ஊடகத் துறையமைச்சர் மங்கள சமரவீர ரூபவாகினி மூலம் தெரிவித்துள்ளார்.

இதை ஆட்சேபித்தே மங்கள சமரவீரவிற்கும், ரூபவாகினிக் கூட்டுஸ்தாபனத்திற்கும் எதிராக 5கோடி ரூபா நட்டஈடு கோரி முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

## மாத இறுதிவரை கடும் வரட்சி

(கொழும்பு)

இம்மாதம் இறுதிவரை நாட்டின் சகல பகுதிகளிலும் கடும் வரட்சி ஏற்படும் என சிறிலங்காவின் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் வரட்சி ஏற்பட்டுள்ள சில இடங்களில் இடிமின்னலுடன் மழை பெய்யலாம். ஆனால் இந்த மழை வரட்சியைப் போக்குவதற்குப் போதாது எனவும், இம்மாத இறுதியில் வடமேல் பருவக்காற்றுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் காலநிலை அவதான நிலையம் கூறியுள்ளது.


## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்யத் தகுதியுடையோர் தேவை. அவர்தம் தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு தமது தகைமைகளை அனுப்பி வைக்கவும்.

*ஈழநாதம் (விளம்பர இல. 5025),*
(5025) *யாழ். சாலை, கிளிநொச்சி.*



ஒக்ரோபர் 10 தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்படும்

## பெண்களுக்கான ஓவியப்போட்டி

### போட்டிக்கான விதிமுறைகள் :

- போட்டியில் வயது வேறுபாடின்றி அனைத்துப் பெண்களும் பங்குபற்றலாம்.
- போட்டிக்காக வரையப்படும் ஓவியங்கள் அனைத்தும் சமூகப் பிரச்சினைகளையோ அன்றி பெண்களின் முன்னேற்றம் சம்பந்தமான கருத்துக்களையோ எடுத்துக் கூறவேண்டும்.
- வர்ண ஊடகமாக நீர்வர்ணத்தையோ அன்றி சோக் (பெஸ்ரல்), கெட்டிச்சாயம், எண்ணெய் வர்ணம் என்பனவற்றில் ஏதாவது ஒன்றினைப் பயன்படுத்தலாம்.
- ஓவியத்தின் அளவு :– A3

**போட்டியாளர்கள் பெயா, முகவா', போட்டித் தலைப்பு என்பவற்றை தனித்தாளில் தெளிவாக எழுதி ஆக்கத்துடன் இணைத்து 28–09–2004 ஆம் திகதிக்கு முன்னர்**

*தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம்,*
*2ஆம் வட்டாரம்,*
*கோம்பாவில்,*
*புதுக்குடியிருப்பு. என்னும் முகவரிக்கு*
*அனுப்பிவைத்தல் வேண்டும்.*

(சி-10209)



### தமிழீழ போக்குவரவுக் கழகம்
## நடத்துநர் பணிக்கான நேர்முகத் தேர்வு

**சம்பளத் திட்டம் :-**

$\frac{4430\text{-}5530}{10X110}$+2000.00=6430+சிறப்புக் கொடுப்பனவு 3000.00=9430.00

**மேற்படி சம்பளத் திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 05. 09. 2004ஆம் நாள் ஞாயிறு காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.**

**மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

**குறிப்பு : இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப் பணிமனை,
விசுவமடு.

(சி-10206)

# அரை மணி நேர ஓய்வின் பின் வை.கோ நடைப்பயணம்

புதுச்சேரியில் நடைப் பயணம் மேற்கொண்ட வை.கோவுக்கு லேசான மயக்கம் ஏற்பட்டது. இதனால் அரை மணிநேர ஓய்வுக்குப் பின்னர் நடைப்பயணத்தைத் தொடர்ந்தார்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ நெல்லையில் இருந்து சென்னை வரை மறுமலர்ச்சி நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைக் கடந்து வை.கோ புதனன்று புதுச்சேரிக்கு வந்தார். புதுச்சேரியில் இரவு தங்கிய வைகோ மறு நாள் காலை திண்டி வனத்துக்கு நடைப்பயணத்தைத் தொடங்கினார்.

அனல் வீசும் கடுமையான வெயிலில் நடைப்பயணம் நகரத்தைக் கடந்து புதுச்சேரியில் எல்லையான கோரிமேட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது தட்டாஞ்சாவடி அருகே வை.கோ மயக்கமடைந்தார். . முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் சுமார்அரை மணி நேரம் ஓய்வுக்குப் பிறகு வை.கோ திண்டிவனத்தை நோக்கி நடைப்ப யணத்தைத் தொடர்ந்தார். அவருடன் தொண்டர் படையினர் அணி வகுத்துச் சென்றனர்.



ஈராக்கியர்களினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சுக்தேவ் சிங் (இடம்), அன்ரர்யாமி(மத்தி), திலக்ராஜ் (வலம்) ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் புதுடில்லியை வந்தடைந்ததும் மலர் மாலைகளுடன் வெற்றியடையாளங்களையும் காட்டினர். இவர்கள் ஈராக்கில் 40 நாட்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்

# கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் மறு.விசாரணைக்கு அரசு உத்தரவு

## –பா.ஜ.க கடும் கண்டனம்

(புதுடில்லி)

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் குறித்து .மறுவிசாரணை நடத்துவதற்கு உயர்மட்டக் குழுவொன்றை மத்தியரசு அமைத்திருப்பதற்கு பாரதிய ஜனதா கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மத்தியரசின் இந்த நடவ டிக்கை அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும் அக்கட்சி குற்றம் சாட்டிள்ளது.

மத்தியமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிற் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. கோத்ரா ரயில் எரிப்புக் குறித்தும் மீண்டும் விசாரணை நடத்த இந்தக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கென்று ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி பாலர்ஜி தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்த புகையிரதத்துறை அமைச்சர் லல்லுப்பிரசாத் யாதேவ் உயர்மட்டக்குழு மூன்று மாதத்தினுள் விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்று கூறியுள்ளார்.

உயர்மட்டக்குழு விசார ணைக்கு பாரதிய ஜனதா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாரதிய ஜனதா கட்சியின் துணைத் தலைவி முப்த அப்பாஸ் நவ்வி கோத்ரா சம்பவத்தை மீண்டும் விசாரிக்கும் மத்தியரசின் முடிவு அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியுள்ளார்.

கோத்ரா சம்பவத்தை விசாரணை செய்வதற்கு மத்தியரசு உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளதை காங்கிரஸ் கட்சி வரவேற்றுள்ளது.

டெஸ் பேக்கறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் குஜராத் அரசு பாராபட்சத்துடன் நடந்து கொண்டுள்ளதால் மத்தியரசு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானது என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.


அருள்மிகு விக்கினவிநாயகர் ஆலயம்
அக்கராயன்குளம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

அக்கராயன்குளம் அருள்மிகு விக்கினவிநாயகப் பெருமான் ஆலயத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. எம்பெருமான் அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தந்து புதிய பரிபாலன சபைத் தெரிவிலும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு இறையன்புடன் வேண்டுகிறோம்.

**ஆலய பரிபாலன சபை**
**அக்கராயன்குளம்.**

(5032)


# சேது சமுத்திரத் திட்டத்தை ரூ 2000 கோடி செலவில் நிறைவேற்ற அரசு ஒப்பந்தம்

## நிதியமைச்சர் ப. சிதம்பரம் அறிவிப்பு

(புதுடில்லி)

மன்னார் வளைகுடாவிலிருந்து பாக்ஜலசந்தி வழியாக வங்கக் கடலுக்கு கப்பல்கள் செல்லும் பாதை ஏற்படுத்துவதற்கான சேது சமுத்திரத்திட்டம் ரூ.2000கோடி செலவில் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துவிட்டது என்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

இந்தத்திட்டத்தைச் செயற்படுத்த அமைப்பு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும்.

இந்தக்கழகத்தில் இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகம், தூத்துக்குடி துறைமுகக்கழகம் உட்பட மற்றவற்றின் சமஅளவுள்ள பங்குகள் இருக்கும் ஒன்றுக்கு1.5 என்ற விகிதத்தில் கடன் பங்குகளுடன் ரூ.800 கோடி அதிகாரபூர்வ மூலதனமாக இருக்கும்.

இந்தியக் கப்பல் போக்குவரத்துக்கழகமும், தூத்துக்குடி துறைமுகக்கழகமும் தங்கள் பங்காகத் தலா ரூ.50 கோடி வழங்கும் டி.சி.ஜ சென்னை துறைமுகக்கழகம், எண்ணூர் துறைமுகக்கழகம், விசாகப்பட்டினம் துறைமுகக் கழகம், பாரதீப் துறைமுகக்கழகம் ஆகியவை தங்கள் பங்காகத் தலா ரூ30 கோடி வழங்கும் மீதிப் பங்குத் தொகையை மத்திய அரசும் மற்ற நிறுவனங்களும் கொடுக்கும்.

இவ்வாறு ப.சிதம்பரம் கூறினார்.

சேது சமுத்திரத் திட்டத்தின் கீழ் மன்னார் வளைகுடாவையும், பாக்ஜலசந்தியையும், கப்பல் போக்குவரத்து மூலம் இணைக்க கால்வாய்வெட்டப்படும் இதன் மூலம் இந்தியாவின் கிழக்கு கடற்கரைத்துறைமுகங்களில் இருந்து மேற்கு கடற்கரை துறைமுகங்களுக்குச் செல்லும். கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு செல்லாமல் இந்தியாவின் கடற்பரப்பு வழியே செல்ல முடியும்.

இதன் மூலம் கிழக்கு கடற்கரையில் இருந்து மேற்கு கடற்கரைக்குச் செல்லும் கப்பல்கள் 400 கடல்மைல் தூரத்தையும் 36 மணி நேரத்தையும் மிச்சம் பிடிக்க முடியும் என்று கூறினார்.

# எதிர்க்கட்சிகளுடன் ஆராய்ந்து பாகிஸ்தானுடன் பேச முடிவு

(புதுடில்லி)

இந்திய பாகிஸ்தான் பேச்சு வார்த்தை நாளை இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை நேற்றுக்காலை முன்னாள் பிரதமர் அடேல்பிகாரி வாஷ்பாஜை பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசியுள்ளதாக பிரதமர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார். நாளை நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையினை முன்னிட்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டனி அரசு எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்தாலோசித்து அரசியல் பொதுக் கருத்துக்களை காண முற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் எல்கே. அத்வானியையும் முன்னர் வெளியுறவு அமைச்சர் கஸ்வர் சிங்கையும் சந்தித்துப் பேசினார்.

பாகிஸ்தானுடன் இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கும் இருதரப்புப் பேச்சுக்களில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் நிற்காமல் தொடருவது குறித்து இந்தியா தனது கவலையை தெரிவிக்குமென்று தனியார் தொலைக் காட்சியொன்றிற்கு நடவர்சிங் தெரிவித்துள்ளார்.


**துயர் பகிர்வு**



தோற்றம் 27 . 11 . 1948 — மறைவு 02 . 09 . 2004

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனிக்குளம் பாலிநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் உயர்திரு

**சீனிவாசகம் இராஜேஸ்வரன்**
**(அஞ்சலர் உபதபாலகம்,யோகபுரம்)**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

ஆவணியில் அவதரித்து அளப்பரிய தொண்டாற்றி. சிறார்களின் கல்வி வளர்ச்சியைச் சிந்தையிலே நிலை நிறுத்தி. பாடசாலை வளர்ச்சிதனில் பங்குடன் செயலாற்றி பலாமரமென நின்றனை. உங்கள் இழப்பு மாபெரும் இழப்பு எமக்கு.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தகவல்
மு/ பாலிநகர் மகாவித்தியாலயம், வவுனிக்குளம்
அதிபர்.ஆசிரியர்கள். உத்தியோகத் தர்கள். மாணவர்கள். பாடசாலை அ. சங்கம். பழைய மாணவர் சங்கம்

(4133)



**9ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 12 . 12 . 1927 — இறப்பு 04 . 09 . 1995

அமரர்
**நாகலிங்கம் இரத்தினம்**
**[றியோ இரத்தினம்]**

நவ இரத்தினங்களில் நாம் விலைமதிக்க முடியாத இரத்தினம் நம் இரத்தினம், றியோ இரத்தினம்.

பிரிவால் துயருறும்
அன்பு உள்ளங்கள்.

(5031)



**மகேஸ்வரன் யோகேஸ்வரி (மாலா) அவர்களின் சாவு அறிவித்தல்**



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் வைரவகோவிலடியைப் பிறப்பிடமாகவும், 131 ஜெயந்தி நகரில் வசித்தவரும் இல.41 கந்தன்குளம் செல்வா நகரை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவருமாகிய மகேஸ்வரன் (மகேந்திரம்) யோகேஸ்வரி (மாலா) 01.09.2004 இல் காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு பாக்கியரெத்தினம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற தம்பிஐயா முத்தம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், மகேஸ்வரன் (மகேந்திரம்) அவர்களின் அன்பு மனைவியும், வோமசீலன் (செல்வம் கனடா), உதய சீலன் (துயா) செல்வாநகர், சந்திரேஸ்வரி யாழ்.பல்கலைக்கழக மாணவி, சுதேஸ்வரி (சுதா), ரதீஸ்வரி (மாவீரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாஜினி (கனடா),சுகி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் வினித், மீரா, அஜித், அயள் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.09.2004 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கந்தன் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:- மகேந்திரம்(கணவர்)
பிள்ளைகள்.

(சி.4908)

## நட்வெஸ்ட் ஒரு நாள் போட்டித் தொடர்

# பிளிண்டொப்,கொலிங்வூட் அதிரடித் துடுப்பாட்டம்

# இரண்டாவது போட்டியிலும் இந்தியா படுதோல்வி



இங்கிலாந்து - இந்திய அணிகளுக் கிடையிலான நட்வெஸ்ட் ஒருநாள் போட் டித் தொடரின் இரண்டாவது போட்டியிலும் இந்திய அணி 70 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது.

ஓவல் மைதானத்தில் நேற்று நடை பெற்ற மேற்படி போட்டியில் நாணய சுழற் சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் இங்கிலாந்தைத் துடுப்பெடுத்தாடு மாறு பணித்தார்.


முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங் களைப் பெற்றது.

கொலிங்வூட், அன்ரூபிளின்டொப் ஆகியோரின் அதிரடித்துடுப்பாட்டம் இந்திய பந்துவீச்சாளர்களைத் தடுமாற வைக்க இங்கிலாந்து மேற்படி ஓட்ட எண்ணிக் கையை எட்டியது.

ஹர்பஜன்சிங் மாத்திரம் இங்கிலாந்து வீரர்களை தடுமாற வைத்த போதும் ஏனைய பந்து வீச்சாளர்களுக்கு விளாசித்தள்ளி ஓட்டங்களைக் குவித் தார்கள் இங்கிலாந்து வீரர்கள்.

ஆரம்பத்தில் 40பந்துகளை எதிர் கொண்டு பத்து ஓட்டங்களைப் பெற்றி ருந்த பிளின்டொப் 93 பந்துகளை எதிர் கொண்டு 99 ஓட்டங்களைப் பெற்றார்.(9 நான்கு ஓட்டங்கள்,4ஆறு ஓட்டங்கள் அடங் கலாக) கொலிங்வூட் 79 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

இவர்கள் இருவரது இணைப் பாட் டமும் மிகச் சிறப்பான முறையில் அமைய மிகப்பெரிய ஓட்ட எண்ணிக் கையை பெற் றது இங்கிலாந்து. இவர்கள் இருவரும் 5ஆவது விக்கெட் இணைப் பாட்டமாக 178 ஓட்டங்களைப் பெற்றனர். இதனை விட சோலங்கி 48, ரெஸ்கொதிக் 27, ஜோன்ஸ் ஆட்டமிழக்காது 12 ஓட்டங் களைப் பெற்றனா.



கங்குலி ரன் அவுட் ஆகும் காட்சி

பந்து வீச்சில் ஹர்பஜன்சிங் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றையும் சோவாக் 2விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 308 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை



ஆரம்பித்த இந்தியா முதலாவது ஓவரில் சோவாக்கின் விக்கெட்டை இழந்தது.

பின்னர் ரன் அவுட்முறையில் கங்குலி ஆட்மிழக்க ஹைப்பும்,லக்ஸ்மனும் இணைந்து அதிரடியாக ஆடிய போதும் சுழற்பந்து வீச்சாளர் ஹைல்ஸின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாது ஆட்டமி ழந்தனர்.

அதனைத் தொடர்ந்து வந்த ராவிட் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க இந்திய அணியின் தோல்வி உறுதியானது. இவர்களுக்குப் பின்னர் வந்த ஹர்பஜன்சிங் அதிரடியாக ஆடி ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை குவித்த போதும் தோல் வியைத் தடுக்க முடியவில்லை.

பந்துவீச்சில் அஸ்ஸி ஹைல்ஸ் 3 விக் கெட்டுக்களையும், பரன்கௌவ் 4 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப் பாட்டக்காரராக பிளிண்டொப் தெரிவானார். இவ் வெற்றி மூலம்

3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற நிலையில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

## எதிரணி எதுவாக இருந்தாலும் இங்கிலாந்து வெல்வதே ஒரே குறி

**விக்கிரம் சோலங்கி**

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் விக்கிரம் சோல ங்கி இந்தியாவில் பிறந்தவர் இவர் நொட்டிங்காம் போட்டியில் இந்தியாவின் தோல்விக்கு இவரது ஆட்டமும் ஒரு காரணமாகும். இந்தியாவில் பிறந்தாலும் இங்கிலாந்தில் குடியேறி... அங்கேயே குடியுரிமை பெற்று, கிரிக்கெட் அணி யிலும் நுழைந்துவிட்டார். உதய்பூரில் (ராஜஸ்தான்) பிறந்தவர் சோலங்கி. நொட்டிங்காம் மைதானத்தில் இருந்த இந்தியரசிகர்கள் அவரது ஆட்டத்தைக் கைதட்டி ரசித்தனர். ஆனாலும் இங்கி லாந்து வெற்றி பெற வேண்டு மென் பதே அவரது விருப்பமாம்.

"இந்திய ரசிகர்கள் எனக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்றால். அது அவர்கள் விருப்பம். என்னைப் பொறுத்த வரை இங்கிலாந்து வெல்ல வேண்டும். எதிர்த்து விளையாடும் அணி-அது இந்தியாவாக இருந்தாலும் -எது என்று கவனிப்பதில்லை நன்றாக விளையாடி வெற்றி தேடித் தரவேண்டும் என்பது தான் எனது இலக்கு. நொட்டிங்காம் போட்டியில் நன்றாக விளையாடினாலும் எனது அணி வெல்லும் கடைசி நிமிடம் வரை களத்தில் நிற்க முடியாதது ஏமாற்றம்தான். இங்கிலாந்து அணிக்காக விளையாடுவதை பெரிய விடயமாக நினைக்கிறேன்" என்கிறார்.




## அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தினால் கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதி

**-கிறிஸ் கெயான்**

எதிர்வரும் 10ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகும் 12 நாடுகள் பங்கேற்கும் I.C.C உலகக கிண்ணப் போட்டிகளில் தனது அணி அவுஸ்திரேலியாவை முத லில் வீழ்த்தினால் சம்பியன் கிண் ணத்தைக் கைப்பற்றுவது உறுதி யாகும் என நியூசிலாந்து வீரர் கிறிஸ் கெயான்ஸ் தெரிவித் துள்ளார். முதலாவது குழுவில் அவுஸ்திரேலிய நியூசிலாந்து அமெரிக்க அணிகள் மோதுகின் றன.

அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற நட்வெஸ்ட்தொடரில் இங்கிலாந்தை வென்று நியூசி லாந்து கிண்ணத்தைக் கைப்பற்றி யதை அவர் நினைவு படுத்தினார்.

நியூசிலாந்து இத்தொடரில் முதலாவது போட்டியில் அமெரிக காவை எதிர்த்து 10 ஆம்திகதி விளையாடும், 16ஆம் திகதி அவுஸ திரேலியாவுடன் மோதும்.


2000ஆம் ஆண்டில் I.C.C கிண்ணத்தை நியூசிலாந்து கைப் பற்றியது. ஆயினும் உலகச் சம்பி யனான அவுஸ்திரேலியா இத் தொடரில் ஒருமுறையும் வெல்ல வில்லை. கிறிஸ்கெயான் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டி யில் ஆட்டநாயகன் விருது பெற்ற வராவார்.

றிக்கிபொண்டிங்கினது தலை மையிலான அவுஸ்திரேலிய அணி மிகப்பலம் வாய்ந்ததாகக் கூறிய கெயான்ஸ் அவ்வணியை வெற்றி கொள்வதே தமது கடினமான பணி என்றார்.



34 வயதான கெயான்ஸின் இங்கிலாந்துடனான கடைசி டெஸ்ட் போட்டியின் பின்னர் சுற்று உற்சாகமாகக் காணப்படுகிறார்.

## தென்னாபிரிக்காவின் பறக்கும் ரொட்ஸ் இந்தியஅணிக்கு பயிற்சி அளிக்க விருப்பம்



இந்திய அணிக்கு களத் தடுப்பு பயிற் சியாளராக விரும்புவதாக தெணாபிரிக்க அணியின் முன்னாள வீரர் ஜொண்டி ரொட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ஜொண்டி ரொட்ஸ் இந்திய அணிக்கு பந்துத் தடுப்பில் சிறப்பு பயிற்சியாள ராக கடமையாற்ற தான் விருப்பம கொண்டுள்ள தாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர்களான யுவராஜ்சிங் மற்றும் முகமட்கைவ் ஆகி யோரின் களத்தடுப்பு மிகச சிறப்பாக இருபபதாக குறிப்பிட்ட ஜொன்டி ரொட்ஸ் சச்சின் டெண்டுல் கரின்களத்தடுப்பு மிக அற்புதமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட்டில் களத்தடுப்பு என்ற வார்த்தைக்கு நேரடி அர்த்தமாக ஜொண்டி ரொட்ஸ் என்ற பெயரைச்சொல்லலாம் மைதானங்களில் பறந்து பாய்ந்து செய்த களத்தடுப்புக் காட்சிகள் இன்னும் நினைவுக்கு வரும் புதிய இலக்கணம் வகுத்த களத்தடுப்பாளர் அவர்.

தென்னாபிரிக்காவுக்கான ஹொக்கி கிரிக்கெட் இரண்டும் விளை யாடியவர்.1992 பார்சிலோனா ஒலிம்பிக் ஹொக்கி அணிக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார் ஆனால் கிரிக்கெட் மீதான காதலால் ஹொக் கிக்கு விடைகொடுத்தார்.

## இறுதிப் போட்டி நாளை

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கால்பந்து சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதிப போட்டிகள் நாளை நடைபெற வுள்ளன.

கழக மைதானத்தில் நடைபெற வுள்ள மேற்படி போட்டியில் சந்திரோதயா வி.க,சோலை வி.க, புதுக்குடியிருப்பு விக்கினேஸ் வரா வி.க,உருத்திரபுரம் ம.வி அணிகள் மோதுகின்றன

## மூன்று நாடுகளும் உறுதி

விடாமற் பெய்த மழையால் நெதர்லாந்து கிரிக் கெட் சபைக்கு ஏற்பட்ட இழப்பை சரி சமமாகப் பகி ந்து கொள்ள இந்தியா,பாகிஸ்தான்,அவுஸ்திரேலியா கிரிக் கெட் சபைகள் சம்மதித்துள்ளன. இந்தியா,பாகிஸ் தான் மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரை சமீபத்தில் நெதா லாந்து நடத்தியது. ஆம்ஸ்ரடாம் நகரில் நடந்த இந்தப போட்டிகளில் மழை குறுக்கிட்டதால் போட்டியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.



**வவுனியா விபுலானந்த கல்லூரியை வெற்றி கொண்ட கிளி.ம.வியின் 14 வயதுப் பிரிவு கடினப்பந்து அணி**


## "நீங்கள் வென்றது தங்கம்தான்" மரதன் லிமாவுக்கு மக்கள் ஆதரவ



மரதன் பிரிவில் வெண்கலம் வென்ற பிரேசில் வீரர் வான் டர் லேடிலிமாவுக்கு பிரேசில் மக்கள் அமோ க வரவேற்பு அளித்து கௌரவித்துள்ளனர்.


எதென்ஸ் ஒலிம்பிக் கில் கடைசி போட்டியான மரதன் போட்டி (43 கி.மீ) கடந்த ஞாயிறன்று நடந்தது. இந்தப் போட்டியில் முந்திச்செல்ல யாருமின்றி முன்னேறிக் கொண்டிருந் தார் பிறேசில் வீரர் வான்டர்லேடிலிமா. அப்போது முன்னாள் பாதிரியார் ஒருவர் இவரை வழிமறித்து தாக்கத் தொடங்கினார். இந்தத் தாக்குதலில் இருந்து விடுபட்டு இவர் ஓட முயற்சிக்கும்போது இத்தாலி யைச் சேர்ந்த ஸ்டெபானோ பால்டினியும அமெரிக்காவின் மெப் கெப்லசிகியும் முந்திச்சென்று விட்டனர். இவர்கள் முறையே தங்கத்தையும், வெள்ளியை யும் தட்டிச்செல்ல லிமாவுக்கு வெண்கலமே கிடைத்தது.

இந்நிலையில் எதென்சிலிருந்து நேற்று முன்தினம் பிரேசில் திரும்பினார் லிமா. இவரு க்கு சாபாலோ விமான நிலையத்தில் ரசிகர்கள் அமோகமான வரவேற்பு அளித்தனர். திரும்பிய பக்கமெல்லாம் 'நீங்கள் வென்றது வெண்கலம் அல்ல... தங்கம் தான்' என்று சத்தம் போட்டு கூறிக் கொண்டிருந்தனர். மக்களின் அன்பு மழையில் நனைந்த லிமா பின்னர் அளித்த பேட்டியில் "கிரேக்க கடவுளும், ஒலிம்பிக் கடவுளும் என்பக்கம் இருந்தனர். அதனால்தான் எனது பதக்க வாய்ப்பு பறிக்கப்படவில்லை. எனது திறமையை மீண்டும் நிருபிக்க ஒரு வாய்ப்பு அமையும்" என்று அமைதியாகக் கூறி முடித்துக் கொண்டார்.



**வவுனியா தமிழ் மத்திய ம.வி.யை வெற்றி கொண்ட கிளி.ம.வியின் 16 வய துப் பிரிவு கடினப்பந்து அணி**

## சிந்தனைக்கு



புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்கு முறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டு கின்றேன்.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 4-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## திருப்பங்களும், குழப்பங்களும்

சமாதான முயற்சிகளில் விரைவில் சில திருப்பங்கள் ஏற்படலாம் என நோர்வேத் தரப்பு நம்புகின்றது. அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை இருப்பதாகவும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிச்சூல்ஹெய்ம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும்போது இதற்கான முடிவுகள் வெளிப்படுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதெனத் தீர்மானம் மேற்கொண்டு அதனை முன்னெடுப்பாரெனில் நோர்வே எதிர்பார்ப்பது போன்று நிச்சயமாகத் திருப்பம் ஒன்றாகவே இருக்கும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா அத்தகையதொரு முடிவை மேற்கொள்வாரானால் அவர் சவால் நிறைந்ததொரு முடிவை எடுத்திருப்பதாகக் கொள்ள முடியும்.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தகையதொரு முடிவை எடுப்பதற்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகக்கூடும் என்ற நோர்வேத் தரப்பின் எதிர்பார்ப்பில் தவறில்லை. ஏனெனில் சூழ்நிலை அத்தகையதாகவே உள்ளது. ஆனால் சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு முடிவிற்குச் செல்வதானால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மட்டுமல்ல வேறுவிடயங்கள் தொடர்பாகவும் சில முடிவுகளை எடுக்க வேண்டியதாக இருக்கும்.

அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இத்தகைய முடிவானது பெரும் பூகம்பத்தை உருவாக்கக்கூடும் ஏற்கனவே அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையிலுள்ள அரசாங்கம் இந்நடவடிக்கையின் மூலம் மேலும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம். குறிப்பாக முக்கிய கூட்டணிக்கட்சியான ஜே.வி.பி.இப்பேச்சுவார்த்தைகளைத் தீவிரமாக எதிர்க்கக்கூடும் சிலவேளை அரசாங்கத்திலிருந்து வெளியேறக்கூடும்.

ஜே.வி.பி. தற்பொழுது எடுத்திருக்கும் அரசியல் நிலைப்பாடானது திட்டவட்டமாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரானதாகவே உள்ளது. இதில் ஜே.வி.பி. பேரம் பேசுதல் எதற்கும் தயாராக இருப்பதாகத்தெரியவில்லை. இந்நிலையில் ஜே.வி.பி.யினை எதிர்த்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே.

இதனைத்தவிர எதிர்வரும் வரவு– செலவுத் திட்டத்திற்கு ஐ.ம.சு. முன்னணிக்கு ஆதரவளிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது. ஆனால் இடைக்காலதன்னாட்சி அதிகார சபையை எதிர்க்கும் ஜாதிக ஹெல உறுமய சனாதிபதி சந்திரிகா புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தால் வரவு–செலவுத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்குமா? என்பது சந்தேகமே.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதென்பது எத்தனை தூரம் சாத்தியப்பாடானதொன்றாக இருக்க முடியும்? சிறிலங்கா பாரியதொரு பொருளாதார நெருக்கடியையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டிருப்பினும் அதன் உள்நாட்டு அரசியல் அதனைப் பெரும் நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளது என்றே கூறலாம் இது ஒருவகையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சனாதிபதி சந்திரிகா உருவாக்கிக் கொண்ட தலைவலி என்று கூடக் கொள்ளலாம்

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதோடு தனது அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான புதிய நகர்வுகள் எதையாவது கொண்டிருப்பாரேயானால் அது நிச்சயமாக நோர்வே எதிர்பார்ப்பது போன்ற அரசியல் மாற்றமாகவே இருக்கும் அதாவது சனாதிபதி சந்திரிகா சவால் நிறைந்த முடிவொன்றை எடுத்துள்ளார் என்றே கொள்ள வேண்டியிருக்கும்.

ஏனெனில் இத்தகையதொரு முடிவினால் சனாதிபதி சந்திரிகா தனது அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கென புதிய ஆதரவாளர்களைத் தேடவேண்டி வரலாம். இதற்குச் சிலரது ஆதரவு கிடைக்கப் பெற்றாலும் கூட அவர்கள் அமைச்சரவையில் பங்கேற்கவோ இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு குறிப்பாக சனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, சனாதிபதித் தேர்தல் முறை ஒழிப்பு போன்றவற்றிற்கு ஆதரவைப் பெறுதல் கடினம் மிக்கதொன்றாகவே இருக்கும்.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா நோர்வே எதிர்பார்த்தது போன்ற முடிவுகளுக்கு வருதல் என்பது இலகுவானதொன்றாக இருக்க முடியாது இவற்றிற்கும் அப்பால் சனாதிபதி சந்திரிகா எதற்கும் தயார் என்ற ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுப்பாரேயானால் ஜே.வி.பி.யை அரசியல் ரீதியில் எதிர் கொள்வதற்கு அவர் தயாராகிவிட்டார் என்றே கொள்ள வேண்டியதாக இருக்கும்.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா சமகாலப் பேச்சுவார்த்தைகள் குறித்து தீர்க்கமான முடிவொன்றிற்கு வருவாரேயானால் தென்னிலங்கை அரசியலில் அது ஒருபெரும் திருப்பமாக மட்டுமல்ல பெரும் குழப்பத்திற்கு வழிவகுத்துவிடவும் கூடும். ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்படவேண்டுமானால் இத்தகைய திருப்பங்களும் குழப்பங்களும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ஆகையால் சனாதிபதி சந்திரிகாவின் முடிவு இலங்கைக்கு மட்டுமல்ல இப்பிராந்தியத்தின் அரசியலில் கூட மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

# நோர்வேப் பிரதிநிதிகளைத் துரத்திவிட்டு இந்திய மத்தியஸ்தத்தைப் பெறவேண்டும்

### ஜாதிக ஹெல உறுமய பா.உ அத்துரலிய ரத்னதேரர்

ஜாதிக ஹெல உறுமய கட்சிப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்திலேயே இருக்கும். ஆனால் சாதாரண எதிர்க்கட்சி போலிராது என ஆசிய சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டியளித்த கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவரான அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளை ஆராய்வதாகவும் அது இந்நாட்டு மக்களுக்கு நன்மையளிக்குமாயின் அதற்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தார்.

தாம் ஒரு மாற்றம்வேண்டியே மக்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறியுள்ள அவர் களின் ஆணைப்படியே செயலாற்றுவோம் என்றார்.

தற்போதைய அரசியல் அமைப்பை சந்திரிகா முன்னெடுத்துச் செல்வதை ஆதரிக்கிறீர்களா. என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் நாம் அதற்கு ஆதரவு அளித்தாலும் புதிய அரசியலமைப்பு தொடர்பாக எமக்கென்று சொந்தக் கருத்துக்கள் இருக்கின்றது. சமஷ்டி முறை அதிகாரம் இந்தியாவில் நடைமுறையிலிருப்பதுபோல் இருப்பின் அதனை ஏற்க முடியாது. பிரிவுபடாத ஆட்சியொன்றுடன் சகலரையும் ஒரே மாதிரி நடத்தும் அதிகாரமுடைய யாப்பை விரும்புகின்றோம் என்றும் கூறினார். தற்போது தமிழ்மொழிக்கு அரச அந்தஸ்து வழங்கப்பட்டதாகக் கூறும் அவர் நாட்டில் சமூக, பொருளாதார ரீதியில் பிரச்சினைகள் இருப்பதை நன்கு அறிவதாகவும் பௌத்தர்கள் என்ற வகையில் எதற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தார். தமிழர்களைத் தமது சகோதரர்களாகவும், சிங்கள மக்களுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதையே விரும்புவதாகத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பெரும்பான்மை சிங்களவர்களால் நசுக்கப்படுகின்றார்கள் எனக் கூறினால். அது சமா தானத்தை விரும்பாதவர்களும் அரச சார்பற்ற சில வெளிநாட்டு அமைப்புக்களின் கூற்றாக இருக் கலாம் என்றும் நோர்வே அரசு இங்கு மத்தியஸ்தர்களாகச் செயற் படவில்லை. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிக்கவே வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இங்குள்ள கண்காணிப்பாளர்களையும், நோர்வேப் பிரதிநிதிகளையும் துரத்திவிட்டு இந்தியாவின் மத்தியஸ்தத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதிகாரப்பரவலாக்கல் அவசியம்

### அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண

(கொழும்பு)

"நாட்டை அழிவிற்கு இட்டுச் செல்லும் போரில் இருந்து நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டின் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும் அதிகாரப் பரவலாக்கலே அவசியமானது.

தற்போதைய சமாதான முயற்சிகள் பலகட்சிச் சார்பின் அடிப்படையில் அல்லது குறைந்தது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தொடர்புபட்ட இருகட்சிச் சார்பின் அடிப்படையில் பலனளிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்" இவ்வாறு சிறிலங்காவின் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச் சரான பேராசியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சென்ற வாரம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலாநிதி என்.எம். பெரேராவின் 25 ஆவது நினைவு தினத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

"சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்காக இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப் பட வேண்டும்

முன்னைய ஐக்கியதேசியக் கட்சி அரசினால் கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் சரிப்படுத்தப் பட வேண்டும்'' என்றும் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர முடிவு

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப்பெற்றுத்தருவதாக கல்வி அமைச்சுச் செயலர் தமக்கு வழங்கியுள்ள எழுத்து மூல உறுதி போதுமானதல்ல என்று கூட்டமைப்பின் இணைச்செயலர் சாந்த பண்டார கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தமதுபிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு கொள்வதற்குச் சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினை குறித்து நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க பல் கலைக்கழக நடவடிக்கைகளை இடையூறு இன்றி முன்னெடுக்க வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு என்று அனைத்துப் பல்கலைக் கழகங்களின் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கல்வி சாரா ஊழியர் போராட்டத்தால் வெளிவாரிப்பரீட்சை ஒத்திவைப்பு

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நாடளாவிய ரீதியாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வந்த கலைமுதற் தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் பாதிப்படைந்துள்ளன.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த புதன்கிழமை முதல் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இன்றும், நாளையும் நடைபெறவிருந்த புவியியல் பரீட்சைகள் நடைபெறமாட்டாது எனவும், அவை நடைபெறவுள்ள திகதிகள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

## சீருடைத்துணி இறக்குமதியில் ஊழல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள சீருடைத் துணிகள் சம்பந்தமாகப் பல சர்ச்சைகள் இப்பொழுது கிளம்பியுள்ளன.

இத்துணிகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி புறக்கோட்டையைச் சேர்ந்த இருபெரும் வர்த்தகர்களுக்கு கேள்விப்பத்திரம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சத்து 80 ஆயிரம் மீற்றர் துணிகள் இதில் அடங்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள இத்துணிகள் "கிரேகிளோன்" வர்க்கத்தைச் சேர்ந்ததா எனத்தற்பொழுது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போது சுங்கத்துறை இதுசம்பந்தமாக விசாரணையை ஆரம்பித்துள்ளது.

## பட்டதாரி நியமனங்களில் தவறுகள் குறித்து ஆராய சபை

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள பட்டதாரி நியமனங்களில் தவறுகள் ஏற்பட்டிருந்தால் இது சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு புதிதாக சபையொன்று அமைக்கப்பட்டுள்ளதெனவும் இச்சபைக்கு பட்டதாரிகள் எழுத்து மூலம்தமக்கு ஏற்பட்டுள்ள தவறுகளை அறிவிக்க முடியும் எனவும் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பாலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

# மாபெரும் விவசாயக் கண்காட்சியை பெருந்திரளான மக்கள் பார்வையிடுகின்றனர்

(அலுவலகசெய்தியாளர்)

வட்டக்கச்சியில் நடைபெறும் மாபெரும் பொருண்மிய விவசாயக்கண்காட்சியைப் பெருந்திரளான விவசாயப் பெருமளவு மக்களும பாடசாலை மாணவர்களும் நேற்றுப பார்வையிட்டனர். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும், அவருடன் யாழ்.மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை ஆகியோரும் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

இவ்விவசாய கால்நடை, கைத்தொழில் தொடர்பான பயன் தரு கண்காட்சிகளைப் பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கண்காட்சிபற்றிக் குறிப்பிடுகையில்,

"யுத்தத்தால் அழிந்துபோயுள்ள எங்களுடைய பிரதேசத்தில் இந்தக் கண்காட்சி என்பது விவசாயிகளுக்கு ஒருபுத்துயிர் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன" என்று குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிடுகையில், "இந்தக்கண்காட்சி மூலம் தாயகத்திலுள்ள வளங்களை இனம்காண்பதற்கும் அந்த உற்பத்தியை மேற்கொள்கின்ற உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

குறிப்பாக எமது வன்னிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு என்பது மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. இங்குள்ள நல்ல இன ஆடுகளிலோ, மாடுகளிலோ இனப்பெருக்கம் செய்கின்ற விடயத்தில் அரசாங்கம் புதிய தொழில்நுட்பங்களை, புதிய வளங்களை எமது பகுதிக்கு அறி முகம் செய்வதில்லை. ஆனால் பொருண்மிய நிறுவனம் புதிய புதிய தொழில்நுட்ப மூலம் நல்ல இன மாடுகளை, ஆடுகளை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இவையெல்லாம் பயன்தரக்கூடியதாகவுள்ளன'' என்றாா.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் கண்காட்சி பற்றிக்கருத்துத் தெரிவிக்கையில், "தமிழர்களுடைய தாயகப்பகுதி ஒருவிவசாய வளர்ச்சியைக் கொண்ட பிரதேசம். அந்த வளர்ச்சியடைந்த விவசாயத்தில் நாங்கள் ஒரு அபிவிருத்தியை நோக்கிச் செல்லவில்லை. இந்த அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது. அதுதான் எங்களுடைய மக்களின் பொருளாதாரத்தை வாழ்வாதாரத்தில் ஒரு மேம்படுத்தலை ஏற்படுத்தும். அந்த அடிப்படையில் இந்தக்கண்காட்சி என்பது விவசாய, கால்நடை, கைத்தொழில் மற்றும் புதிய தொழில் நுட்ப முறைகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் பாரம்பரிய விவசாய முறைகளைக் கடைப்பிடித்துவரும் எமது விவசாய மக்கள் மத்தியில் இந்தக் கண்காட்சியானது ஒரு அறிவியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது திடமான முடிவாகவுள்ளது என்றார். (சோ,கு)

## முஸ்லிம்....

அடிப்படைவாத கருத்துக்களின் பால் அதிக நாட்டம் கொண்டிருப்பது தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழு ஒன்று தோற்றம் பெறுவது இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் கேணல் ஹரிகரன் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக பதவியேற்றுள்ள பாகிஸ்தானின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி கேணல் வலி இந்த அடிப்படைவாத அமைப்புக்கு உதவி புரியலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.கேணல் வலி பதவி ஏற்ற காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் சிலருக்குப் புலமைப்பரிசில் வழங்கி பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் இவர்கள் அங்கு எதனைக் கற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதே தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வி என்றும் கேணல் ஹரிகரன் கூறியுள்ளார். (32)

# கண்காட்சி நீடிப்பது குறித்து கோரப்பட்டால் ஆராயப்படும்

கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடைபெற்று வரும் மாபெரும் விவசாயக் கண்காட்சி இன்று நிறைவுறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்கள், விவசாயிகள், கமக்காரஅமைப்புக்கள், ஆர்வலர்கள் ஆகியோர் வேண்டுகோள்விடுக்கும் பட்சத்தில் இக் கண்காட்சி மேலும் நீடிக்கப்படுவது பற்றிக் கருத்தில் எடுக்கப்படுமென த.பொ.மே. நிறுவனமும் கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவினரும் தெரிவிக்கின்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில்சார் நிறுவனங்கள், கமநல சேவைத் திணைக்களம், யாழ்பல் கலைக்கழக விஞ்ஞானபீடம், விவசாயபீடம், பனைதென்னை அபிவிருத்திச் சபை நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயஉற்பத்தி சார் நிறுவனங்கள், தொழில்த்துறை திணைக்களம், நியாப், நவீன வேளாண் சேவை ஆகியன இணைந்து இந்த மாபெரும் விவசாய உற்பத்திசார் கண்காட்சியை நடத்திவருவது தெரிந்ததே.

இக் கண்காட்சியினை பாடசாலைகளினதும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவசாயப்பெருமக்கள் ஆர்வலர்கள் என பெருந்திரளாகப் பார்வையிட்டு வருகின்றார்கள் மேலும் இக் கண்காட்சியினை தவறவிடாது ஆர்வலர்கள் பார்வையிட்டு ஆற்றலையும், அபிவிருத்தியையும் பெருக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் கண்காட்சி ஒருங்கிணைப்புக் குழுவினரும். (15)

## அரசுக்கு...

நிபந்தனை அற்றதாக இருக்குமெனத் தெரிவித்துள்ளார். அரசிற்கு தமது கட்சியைச் சேர்ந்த 08 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்களென மேலும் தெரிவித்துள்ளார். இதனால் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை கிடைப்பதுடன் நிர்வாகத்தை நம்பிக்கையுடனும் வலுவான நிலைமையுடனும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கலாமென சுட்டிக்காட்டியுள்ளார். அரசின் அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு தமது கட்சி ஆதரவு வழங்குமெனவும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சரவை பதவிகளை வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து அரசாங்கமே தீர்மானிக்கவேண்டுமென அவர் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார். இவர் தமதுகட்சியின் தீர்மானம் குறித்து சனாதிபதிக்கு நேற்று மாலை கடிதம் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மறு அறிவித்தல்வரை பால் கொள்வனவு நிறுத்தம்

வன்னி பால் சேகரிப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப் பட்டு வந்த பால் கொள்வனவு மறு அறிவித்தல்வரை நடைபெறமாட்டாதென வன்னி பால் சேகரிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

## ரமேஸ்....

நேற்றுக்காலை 9.00 மணிக்கு சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வந்திறங்கிய இவர்களைத் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்றார். மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் ரமேஸ், மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோருடன் தளபதிகளும் வருகை தந்துள்ளனர். இவர்கள் கிழக்குமாகாண நிலை குறித்தும், தற்போதைய நிலைகுறித்தும் கலந்துரையாடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (ச.தீ)

## அரசியல்....

கூறினார். மேலும் அவர் கூறுகையில்,மட்டு.அம்பாறை மாவட்ட நிலை மைகள் தற்போது பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் சுமுகமான நிலையில் எமது அரசியல் வேலைகளையும் ஏனைய வேலைத் திட்டங்களையும் நாங்கள் செய்யக்கூடியதாக இருக்கின்றது அத்தோடு வழமை போன்று எமது படைக்கட்டு மானப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தான் சில அசம்பாவிதங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக அண்மையில் வாகரைப் பகுதியில் மாங்கேணி எனப்படும் இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் போராளிகள் தாக்கப்பட்டு வீரச்சாவடைந்தனர். இதுதொடர்பாக அப்பகுதி போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழுவினரை அழைத்து அந்த நிலைமையை கூறியிருக்கி றோம். அத்தோடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களின்றி அரசியல் பணிகளில் ஈடுபடும் எமது போராளிகளுக்கு அச்சுறுத்தல்களும் ஏற்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இராணுவ உயர்மட்டங்களை அழைத்துக் கதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றோம் என்றார்.

கிழக்குப் பகுதியில் இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக இராணுவ அதிகாரிகள் ஒருவர் கூறியுள்ளார். இதுபற்றி உங்கள் கருத்து என்ன? எனக் கேட்டபோது புலிகள் தாக்குதலைத் தொடங்கினால் தாம் திருப்பித் தாக்கத் தயாராக இருப்பதாக இராணுவத்தளபதி கூறினார்.

ஆனால் நாங்கள் இதுதொடர்பாகத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். என்னவென்றால் எங்களது பிரதேசங்களில் எந்த தாக்குதல் நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. ஆனால், இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்தான் அவ்வாறான சம்பவங்கள் நடை பெறுகின்றன. அதற்கு இராணுவத்தினரே பொறுப்பேற்க வேண்டும் என்பதை நாங்கள் வெளிப்படையாகத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம் என்றார். (ச)

## தேசியத்....

முன்னணி, சிஹல உறுமய, சிங்கள ஜாதிக சங்கம ஆகிய கட்சிகள் சமர்ப்பித்த மனுவை ஆராய்ந்த பின்னரே இந்த உத்தரவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்துள்ளது. இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மகிந்தராஜ பக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சரவையையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்தின் அரசியல் யாப்பை மாற்றுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

## சுதந்திரக்....

எதிர்பார்க்கப்பட்ட போதும், லண்டனிலிருந்து பிரான்சிற்கு திடீர் பயணமொன்றை மேற்கொண்டதன் காரணமாகவே அவரால் இந்த நிகழ்வில் பங்கேற்க முடியவில்லை என சனாதிபதி தரப்புகள் தெரிவித்தன.

இந்நிலையில், இக்கட்டட அடிக்கல்நாட்டுவிழாவை,தான் கொழும்பு வரும்வரை பின்போடும்படி சந்திரிகா கேட்டுக்கொண்டிருந்தபோதிலும், அதைப் புறக்கணித்து, சனாதிபதியின் பெயர் பொறித்த கல்லை, பிரதமர் மகிந்தராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

சனாதிபதி கலந்துகொள்ளவில்லை என்பதால், அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க போன்ற சுதந்திர கட்சி முக்கியஸ்தர்கள் நேற்று முன்தினம் இவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. கட்டடத்திற்கான அத்திவாரக்கல்லைத் நாட்டிவைத்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உரை நிகழ்த்தும்படி கோரியபோது, உரைநிகழ்த்த மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. இருப்பினும் இங்கு வரவேற்புரை நிகழ்த்திய கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, சனாதிபதி சந்திரிகாவின் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார் ஆளும் ஐ.ம.சு.மு.க்குள்ளும், சுதந்திரக் கட்சிக்குள்ளும் கருத்துமோதல்கள் வலுத்துவருவதை இது சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (32)

## பேச்சு....

மீண்டுமொருமுறை யுத்தத்தை தமிழர்கள்மீது திணிக்குமானால் அதனை எதிர்கொள்ள தமிழர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தயாராகவுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறினார். அத்தோடு இந்தியாவின் டில்லியிலே இருக்கின்ற இந்திய ஆளும்கட்சி எதிர்க் கட்சிகளைப் போய் சந்திப்பது அதிலே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசப்பேசுவதாகத் தெரிவித்தோம். தமிழ்ச்செல்வன் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அத்தகைய பயணத்துக்குரிய ஏற்பாடுகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் கூறியிருக்கிறார். அதனடிப்படையில் நாங்கள் விரைவாகச் செயற்படவுள்ளோம்.

பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். பேச்சுக்கும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாலும் தான் இதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதே தவிர, விடுதலைப்புலிகளால் அல்ல. இருப்பினும் அதை மீண்டும் தொடர்வதற்கு அரசை நாங்கள் நிச்சயமாக வலியுறுத்துவோம். ஏனெனில் பலவருடங்களுக்கு முன் தொண்டமான் அவர்கள்கூட பத்து வருடத்திற்குப் புலிகளிடம் நிர்வாகத்தைக் கொடுத்துப் பாருங்கள் அவர்களின் திறமை புரியும். அதற்கிடையில் பேச்சுக்களை பேசி தீர்வை எட்டுங்கள் என்றார். ஆகவே இது அசாத்தியமான தொன்றோ. கோரிக்கைகள் எவரும் அச்சப்படக் கூடியதோ அல்ல. இதைக்கூட பெரும்பான்மைக் கட்சிகள் தர முன்வரா விட்டால் பின்னர் ஏற்படும் விளைவுகளை சந்திப்பதற்கு அவர்கள் தயாராக வேண்டிவரும். ஜே.வி.பியைப் பொறுத்த வரை இப்போதும் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக் கூடாது என்ற பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தின் ஓர் அங்கமாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அமைச்சர்களாகவும் இருக்கிறார் கள். கடந்தகால வரலாறுகளை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்கால வரலாற்றை மாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கும் கணிசமான அளவு இருப்பதென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்றுக்காலை 11 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் சுமார் 3மணி நேரம் நடந்த இந்தப் பேச்சுக்களில் மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஸ்ணன் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச.தீ)


# துயர்பகிர்கின்றோம்



**மகேஸ்வரன் யோகேஸ்வரி**

**(மாலா)**

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் வைரவகோவிலடியைப் பிறப்பிடமாகவும், 131 ஜெயந்திநகர் – கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய அமரர் மகேஸ்வரன் யோகேஸ்வரி (மாலா) அவர்களின் மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குமரகுரு புடவை அழகுபொருள் -வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி. T.p-021-2285971

தகவல்:-
கணபதிப்பிள்ளை
சக புத்திரர்கள்.
(சி.10151)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.